விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 26 சனிக்கிழமை (11.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.தே.கட்சியின் 25 எம்.பிக்கள் சுயாதீனமாக செயற்பட முடிவு

## பிரச்சினையை தீர்க்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

கட்சித்தலைமைத்துவ பிரச்சினை குறித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக்கட்சி அவசரக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது. அதேவேளை கட்சிப் பிரச்சினைகள் தீர்க்கப்படா விட்டால் ஐக்கிய தேசியக்கட்சியின் 25 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனக் குழுவாக அமர்ந்து செயற்படுவார்கள் என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர கூறினார். (17ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீது வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இடம் பெறும் இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகள் அடுத்தமாதம் 13ஆம் திகதி வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தலைமையகத்தில் நேற்றுக் காலை 8.00 மணிக்கு இந்த இரண்டாவது இராணுவ நீதிமன்றம் கூடியது. இதன் போது சாட்சியாளரின் சட்டத்தரணி மன்றில் சமுகம் அளிக்கவில்லை.

சாட்சியாளரின் சட்டத்தரணி இவ்வாறு முன்னிலையாகாததால் (17ஆம் பக்கம் பார்க்க)

## வெடி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புன்னநீராவி நாதன்குடியிருப்புக் கிராமத்தில் நேற்று இடம் பெற்ற வெடிவிபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

புன்னநீராவி நாதன்குடியிருப்புக்கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் அங்கு தற்காலிக கொட்டில்களை அமைத்து வருகின்றனர். (17ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்களுக்கு வழங்கவிருந்த பயிற்சியை நிறுத்தியது அமெரிக்கா

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் இலங்கையர்களுக்கு வழங்கப்படவிருந்த பயிற்சி நெறிகளை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனம் இடை நிறுத்தியுள்ளது.

இலங்கையர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின் மூலம் அமெரிக்க தொழிற் சந்தையில் பாதிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க குடியரசுக்கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இலங்கையர்களுக்கு பயிற்சி வழங்குவதை எதிர்த்துள்ளார்.

மூவாயிரம் இலங்கையர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு யூ.எஸ்.எயிட் நிறுவனம் இணக்கம் தெரிவித்திருந்தது.

பீ.பீ.ஓ. எனப்படும் பிசினஸ் புரோசெசிங் அவுட் சோசிங் மற்றும் கோல் சென்டர்களில் பணியாற்றுவதற்காக இலங்கையர்களுக்கு தகவல் தொழில்நுட்ப (17ஆம் பக்கம் பார்க்க)

## 33 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் அடிப்படை உரிமை மனுத்தாக்கல்

(கொழும்பு)

அமைச்சரவைத் தீர்மானமொன்றின் அடிப்படையில் 3 பொலிஸ் அதிகாரிகள் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்துள்ளது.

கீழ் மட்டத்திலிருந்து இம் மூன்று பொலிஸாரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக (ஏ.எஸ்.பி) பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக 33 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மேற்படி மனுவில் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அமைச்சரவை பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு செயலர், பிரதமர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச-5)

## தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் கே.பியை இணைக்க எதிர்ப்பு

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க்கட்சிகளின் ஒன்றியத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினரான குமரன் பத்மநாதன் (கே.பி.) பிரதிநிதிகளை இணைத்துக்கொள்வதற்கு மேற்படி ஒன்றியத்தில் உள்ள சில தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

கே.பியின் லண்ட (18ஆம் பக்கம் பார்க்க)

## பாக். தீவிரவாதிகளுக்கு இலங்கையில் பயிற்சியா!

## மறுக்கின்றார் பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

பாகிஸ்தானைச் சேர்ந்த எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இலங்கையில் பயிற்சி பெறவே இல்லை என்று இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய தெரிவித்தார். கொழும்பிலுள்ள லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தின் பயிற்சி முகாமொன்றில் இராணுவப் (17ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை காக்க வேண்டியிருந்ததால் புலிகளை தோற்கடிக்க தாமதமானது



## மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சாட்சியம்

(கொழும்பு)

பொதுமக்கள் இழப்புக்களை தவிர்த்து யுத்தம் முன்னெடுக்கப்பட்ட காரணத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதில் கால தாமதம் ஏற்பட்டதாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிடம் சாட்சியமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளில்லா உளவு விமானங்கள் மற்றும் துல்லியமான உளவுத் தகவல்களின் அடிப்படையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதனால் பொதுமக்கள் இழப்புக்களை தவிர்க்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இஸ்ரேலிருந்து தருவிக்கப்பட்ட ஆளில்லா உளவு விமானங் (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## நாகேந்திரன் சிவஞானசேகரம்

**(ஆலை இயக்குனர் (மில்லர்), காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்)**



நவாலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரன் சிவஞான சேகரம் நேற்று 10.09.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான நாகேந்திரன் ஆசைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும், விஜயதேவி,லலிதாதேவி (அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா), விமலாதேவி (டாக்டர்,மந்திகை போதனா வைத்தியசாலை), சறோஜினிதேவி (தொழில்நுட்ப உத்தியோகத்தர்,மாநகரசபை, யாழ்ப்பாணம்),தவராசசேகரம்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,சுழிபுரம்),ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,அ.ஞானானந்தன்,நா.விஸ்வலிங்கம், V.G.தங்கவேல்,M.சத்தியதாசன்,C.செல்வநாயகம், செந்தாமரைச் செல்வி (அமரர்)ஆகியோரின் மைத்துனரும்,

ஸ்ரீ பிறேமினி,ஸ்ரீ வரதராஜா(அமரர்),தனேந்திரன்(மின் இணைப்பாளர்,கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஸ்ரீகாமினி(அமரர்), அம்பிகாபதி(முகாமைத்துவ உதவியாளர், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம்,வட மாகாணம்,திருகோணமலை),சந்திரமதி (ஆசிரியை,யா/மானிப்பாய்,மெமோறியல் ஆங்கில பாடசாலை), சத்தியவான் (கல்வியியற் கல்லூரி,மட்டக்களப்பு)ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பா.பாஸ்கரன் (மேசன்,கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்),த.கிரிசாந்தி ஆகியோரின் மாமனாரும், சியாமளா, வக்சலா,தேசிகன்,ரிவகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2010) நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(2440)

## யதகுலசிங்கம் வைகுந்தன் (குந்தன்)

**(முகாமையாளர்,கதிரவன் இரும்பகம்,சாவகச்சேரி)**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட யதகுல சிங்கம் வைகுந்தன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (09.09.2010) அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யதகுல சிங்கம் மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் பராசக்தி அவர்களின் அன்பு மருமகனும் சுதர்சினி (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை ) அவர்களின் அன்புக் கணவரும்,அபிஷாயினியின் ஆருயிர் தகப்பனாரும்,அருட்செல்வி (மஞ்சு),மேகலா (நோர்வே), அரவிந்தன் (அமெரிக்கா),சிவதீபன், சியாமினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற நீதிராசா மற்றும் அருள்முருகன் (நோர்வே),குகதர்சினி,லோபனா,கலைச்செல்வி,சாந்தினி,சத்தியதாசன்,சத்தியபாலன் ஆகியோரின் அருமை மைத்துனரும் விக்னேஸ்வரநாதன்,பரஞ்சோதி ஆகியோரின் சகலனும் கோபிகன், நிஷாந்தி,பிரசன்னா,கஜேந்திரன், ஜீவிதா, சயந்தன்,நிவேதா, நிலாஷன், நிதுஷா ஆகியோரின் அருமை மாமனாரும், யதுவின் பெரிய தந்தையும், அக்ஷயா, கிஷானா, சாரங்கன், யதுஷா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வர[illegible]ம்மன் கோவிலடி,
நாவலடி ஒழுங்கை,கொக்குவில் மேற்கு ,
கொக்குவில்.0776589049

தகவல்:
குடும்பத்தினர்

(2447)

## யூபிலிப் பெருவிழா

சில்லாலை தூய வேளாங்கன்னி ஆலய யூபிலிப் பெருவிழா இன்று மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவுடன் ஆரம்பமாகிறது.

நாளை காலை 6.45 மணிக்கு பெருவிழா திருப்பலி இடம்பெறும். (சு)

## லொறியில் சிக்குண்டு குழந்தை பலி

தரிப்பிடத்திலிருந்து லொறி ஒன்றை பின்பக்கமாகச் செலுத்தும் போது வீட்டு முற்றத்திற்குவந்த ஒருவருடக்கைக்குழந்தை அதில்சிக்குண்டு ஸ்தலத்திலேமரணமான பரிதாபமான சம்பவம் கடுகண்ணவையில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் லொறியைச் செலுத்தியவர் அக்குழந்தையின் பாட்டனாகும். இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது.

வீட்டினுள் இருந்த குழந்தை தனது மூத்த சகோதரர்கள் பாடசாலை செல்வதைப் பார்க்கவே வெளியே வந்துள்ளது. அச்சமயம் பாட்டனார் கராஜில் நிறுத்தியிருந்த லொறியை பின்பக்கமாக எடுத்துள்ளார். எதிர்பாராத விதமாக இது நடந்துள்ளது.இவ்வாறு மரணித்த குழந்தை பிலிமத்தலாவை கிராகம என்ற இடத்தைச்சேர்ந்த பாரமிசெஹென விஜேரதனயாகும்.


## சிவாச்சாரியார்கள் தேவை

இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவாச்சாரியார்களாக பணி செய்வதற்கான விரும்பும் சிவாச்சாரியார்கள் தங்களின் நிழற்படம், சுயவிபரக் கோவை, நற்சான்றிதழ்கள் என்பவற்றை info@ammanealing.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.
ஆங்கிலத்தில் பேசுதல், தமிழில் பூசைசெய்யும் அனுபவம் என்பன விசேட தகுதிகளாகக் கொள்ளப்படும்.

நன்றி

சொ.கருணலிங்கம்
தலைவர்
நிர்வாகசபை.

(2441)



## உங்கள் கல்வித் தகைமையை உயர்த்தி சர்வதேச தொழில் வாய்ப்பு அளிக்கும் விசேட கற்கைநெறிகளுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

- சர்வதேச நாடுகளில் வேலைவாய்ப்புக்கான தகுதியைப் பெறல்.
- ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கான பயிற்சியுடன் கூடிய கணனிப் பயிற்சி
- எங்கள் விரிவுரையாளர் உதவியுடன் உங்கள் விருப்பு பாடத்தை தெரிவு செய்தல்.
- சர்வதேச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறலும் அதற்கான விசா பெறல் மற்றும் பிரயாண தங்குமிட ஒழுங்குகள் செய்தல் போன்றன சம்பந்தமான வழிகாட்டல் கருத்தரங்கு

**U.K இல் இருந்து வருகை தந்துள்ள திரு.ஸ்ரீ.கந்தையா (B.Sc,MBA)**

Visiting Professor Satistic Managment in Leadership.
Contacting leactures,workshops,and seminar in the UK ,Africa ,Midleast and far east.
has considerable experience working in bode both in the public and commercial Seactors.

**திரு.வி.நிரஞ்சன்**

Consultant Partleet Mallorys Stock Brokers

ஆகியோரால் நடத்தப்படவுள்ளது.

காலம் : சனிக்கிழமை (11.09.2010) காலை 9.30-2.00 வரை
இடம்: Spectra Skills
19,Stanly Road ,
2nd floor of peoples Bank Building ,Jaffna.
T.P.:021 222 1422,
021 222 1423


(C-1134)

பெற்றோரும் பங்குபற்றலாம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


# மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் சந்திரகுமார்

**(முன்னாள் இலங்கை வங்கி காசாளர்)**



சங்கானையைப் பிறப்பிடமாகவும் விளானை வசிப்பிட மாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய விஸ்வலிங்கம் சந்திரகுமார் நேற்று (10.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான விஸ்வலிங்கம்-நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் செல்லம்மா தம்பதியரின் மருமகனும் தேவராணியின் அன்புக் கணவரும் வினோத்-காமராஜ் (இந்தியா), ஜினோத் (லண்டன்), ஜெனோத்-கிரிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (10.09.2010) வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

தகவல்
திருமதி சிவானந்தன் குடும்பம்.
T.P:-021 3734425

(2445)

## சைவப்புலவர் சங்கத்தினால் மாணவர்களுக்கான போட்டிகள்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கப் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் அனைத்துப் போட்டிகளும் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்க செயலாளர் சைவப்புலவர் செ.கந்தசத்திய தாசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை இப்போட்டிகள் யாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனமுன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கிளிநொச்சி சாந்தபுரம் மக்கள் இன்று மீள் குடியமர்வு

கிளிநொச்சி சாந்தபுரம் மக்கள் இன்று சனிக்கிழமை மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றப் பிரதிக்குழுத் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்போது,

நீண்ட நாட்களாக பலத்த தாமதங்களின் மத்தியில் இருந்த இந்த மக்களின் மீள்குடியேற்றம் இன்று நடைபெறவுள்ளது. ஏற்கனவே 26 குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நாளை மிகுதியாக உள்ள 181 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர். மீள்குடியேறும் மக்கள் மீண்டும் தமது சொந்த நிலத்தில் மகிழ்ச்சியுடன் வாழலாம். சாந்தபுரத்திலுள்ள பாடசாலையையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ச-3)

## மிஹின் லங்கா யாழ்ப்பாணத்தில்

மிஹின் லங்காவின் புதிய கிளையொன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

இக் கிளை இல.289 ஸ்ரான்லி வீதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் திறந்து வைக்கப்படுகிறது.

மிகின் லங்காவின் மூலம் வெளிநாட்டு விமான சேவைக்கான டிக்கெட்டுக்களை யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அதன் சேவை வாரத்தில் ஏழு நாட்களும் இடம்பெறும் எனவும் இதன் யாழ்.பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச-5)


## வீடு விற்பனைக்கு

மணிக்கூட்டு கோபுர வீதியில்(ஸ்ரான்லி றோட்டிற்கு மிக அண்மையில்) வீடு வளவு(1 பரப்பு)விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777111212
தரகர் தேவையில்லை.

(2448)

# இன்று ஒரு தகவல்

## ராஜாஜி

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டிருந்த காலம் அது.

அப்பொழுது மூதறிஞர் ராஜாஜி சேலத்தில் வழக்கறிஞராக இருந்தார்.

அவர் ஒரு சமயம் தன்னிடம் வேலை செய்து கொண்டிருந்த பணியாளரைக் கூப்பிட்டு,

"இதோ பாரப்பா, இந்த முத்திரையை இந்த தபாலட்டையில் ஒட்டிக் கொண்டுவா" என்று சொன்னார்.

உடனே அந்த ஆள் தபாலட்டையையும் முத்திரையையும் வாங்கிக் கொண்டுபோய் பசை தடவி அதில் ஒட்டினார். திருப்பிக் கொண்டுவந்து ராஜாஜியிடம் கொடுத்தார்.

இவர் அதை வாங்கிப் பார்த்தார். உடனே சிரிக்க ஆரம்பித்து விட்டார். அவரால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அந்தப்பணியாளரைப்பார்த்து, "ஏனப்பா, நாங்கள் எல்லோரும் எவ்வளவு பாடுபட்டு முயற்சி செய்து போராடிக் கொண்டிருக்கிறோம். நீ ஒரு நிமிடத்தில் செய்து விட்டாயே" என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

பணியாளருக்கு உடனடியாக ஒன்றும் புரியவில்லை. என்னவென்று பார்த்தார்.

ராஜாஜி சொன்னார்:

"ஆமாப்பா! நீ ஒரு நிமிடத்திலேயே பிரிட்டிஷ் மன்னரைக் கவிழ்த்துவிட்டாயே" என்றார். அதன் பின் தான் விபரம் புரிந்தது. அந்தப் பணியாளர் மன்னரின் உருவமிருந்த முத்திரையை தலைகீழாக ஒட்டியிருந்தார். அதைப் பார்த்துவிட்டுத்தான் ராஜாஜி அப்படிச் சொன்னார்.

இந்த நகைச்சுவையுணர்வு அவருக்கு இயல்பாகவே இருந்தது.

சேலத்தில் வெங்கடசுப்பையர் என்ற பிரபல சட்டத்தரணி இருந்தார்.

அவரும் ராஜாஜியும் கருனூரில் ஒரு பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பி ரயிலில் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார்கள். இரவு நேரம்.

வெங்கடசுப்பையர் ஜன்னலோரமாக உட்கார்ந்து பயணம் செய்து கொண்டிருந்தார். திடீரென்று ஓரிடத்தில் அவருடைய கைக்கடிகாரம் நழுவி ஜன்னல் வழியாக வெளியே விழுந்து விட்டது. அந்தக் கடிகாரத்தை அவர் உயிருக்குயிராக் பாதுகாத்து வைத்திருந்தார்.

அவர் சட்டத்தரணியாவதற்கு முன்பு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பணி முடிந்து விலகும் போது அவரிடம் படித்த மாணவர்களெல்லாம் சேர்ந்து மிகவும் பிரியத்தோடு கொடுத்த கைக்கடிகாரம் அது.

அப்படிப்பட்ட அன்புப்பரிசை திடீரென்று இழந்து விடுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்?

"ஐயையோ, கடிகாரம் வெளியில் விழுந்துவிட்டதே" என்று பதற்றத்துடன் சத்தம் போட ஆரம்பித்தார்.

ராஜாஜி பக்கத்தில் தான் உட்கார்ந்திருந்தார். இருந்தாலும் இதைக் கேட்டுப் பதற்றப்படவில்லை. பதில் எதுவும் சொல்ல வில்லை.

அவர் பாட்டுக்கு என்னத்தையோ ஒன்று, இரண்டு மூன்று என்று எண்ணிக்கொண்டு வந்தார்.

வெங்கடசுப்பையர் மிகவும் வேதனைப்பட்டார்.

"என்னங்க இது? என்னுடைய அருமையான கைக்கடிகாரம் நழுவி வெளியில் விழுந்துவிட்டது. அதற்காக நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னவென்றால், இதைக் கொஞ்சம் கூட காதில் வாங்காமல், குழந்தை மாதிரி என்னத்தையோ எண்ணிக் கொண்டே வருகிறீர்களே" என்றார்.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. ராஜாஜி ஸ்டேஷன் மாஸ்டரை அழைத்தார். அவர் வந்ததும் அவரிடம் பேசினார்.

"சேர், எங்களுக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். நாங்கள் வரும் வழியில் என் நண்பருடைய கைக்கடிகாரம் வெளியே விழுந்துவிட்டது. அது விழுந்த இடத்திலிருந்து தந்திக் கம்பங்களை விடாமல் எண்ணிக் கொண்டு வந்திருக்கிறேன். இவ்வளவு கம்பங்களுக்கு அப்பால் அது கிடக்கும். தயவு செய்து யாரை யாவது அனுப்பி அதைத் தேட ஏற்பாடு செய்யுங்கள். அது கிடைத்துவிட்டால் எங்களால் முடிந்த அன்பளிப்புச் செய்கிறோம். அது கிடைத்துவிட்டால் எங்களுக்கு ஒரு கடிதம் போடுங்கள்" என்று சொல்லி முகவரியையும் கொடுத்தார். சிறிது நாட்களில் கடிகாரமும் வந்து சேர்ந்துவிட்டது.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், 'பதற்றம் அடையக் கூடிய நேரத்தில் கூட அறிவைச் சிதறவிடாமல் செயறபடுத்தும் சாமர்த்தியம் எல்லோருக்கும் சுலபமாக வந்துவிடாது என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான்.

அவருடைய நகைச்சுவை உணர்வுக்கு இன்னொரு உதாரணம்:

ஒரு தடவை அவரைப் பார்க்க ஒரு நண்பர் வந்தார்.

"என்னப்பா செய்து கொண்டிருக்கிறாய்?" என்று விசாரித்தார் ராஜாஜி.

"இப்பொழுது நான் நிறைய கதை, கட்டுரையெல்லாம் எழுதுகிறேன். அவற்றை புத்தகமாக வெளியிடுகிறேன்" என்றார் அவர். "அப்படியானால் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய்? என்று கேட்டாராம் ராஜாஜி. இங்கே எழுதுவதை நம்பி யாரும் காலம் தள்ள முடியாதென்பதை அவ்வளவு தெளிவாக அவர் புரிந்து வைத்திருக்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இரு வெவ்வேறிடங்களில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயம்

இருவெவ்வேறு இடங்களில் இடம்பெற்றவிபத்து சம்பவங்களில் படுகாயமடைந்த இருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வரணி வடக்கு கரக்காய் பகுதியில் கடைக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரை 4 பேர் கொண்ட குழுவினர் மறைந்திருந்து இரும்புக் கம்பியால் தாக்கியதில் குறித்த குடும்பஸ்தர் தலையிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரக்காய் முருகன் கோவிலைச் சேர்ந்த க.தியானிஸ் (வயது 40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி நகரப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் கயஸ்வான், மோட்டார் சைக்கிள் விபத்தில் நெல்லியடியிலிருந்து வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீது பின்னால் வந்த கயஸ்வான் மோதியதில் குறித்த இளைஞன் முகத்திலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதில் வெள்ளிருவைச் சேர்ந்த நவரத்தினம் - பாஸ்கரன் (வயது 21) என்ற இளைஞனே பாதிக்கப்பட்டவராவார். (ஸ்ரீ-7-24)

# நினைவுப் பேருரையும் கலாசார நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்தின் நினைவுப் பேருரையும் கலாசார நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட பீடாதிபதியும் உடற்றொழியியல் பேராசிரியருமான வைத்திய கலாநிதி கே.சிவபாலன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-4)

# கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் பொலிசாரால் கைது

பகல் வேளையில் பொலிஸ் உத்தியோகத்தராகவும் மாலை வேளையில் கொள்ளையராகவும் செயற்பட்ட நபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மாலைவேளையில்பெண்களின் தங்கச் சங்கிலிகளை குறித்த நபர் கொள்ளையிட்டு வந்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று இந்தக் கொள்ளை இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனமடுவ பிரதேசத்தில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளையிடப்பட்ட தங்கச் சங்கிலிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# அரைக்கும் ஆலைக்கு தீ வைத்து விசமிகள் அட்டகாசம்

புத்தூர் கிழக்குப் பகுதியில் இயங்கி வந்த அரைக்கும் ஆலை யொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு விசமிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

புத்தூர் கிழக்கு குமரகுருபரன் சனசமூக நிலையத்துக்கு அருகில் இயங்கி வந்த ஆலையே தீக்கு இலக்கானதாகவும் நள்ளிரவு 12 மணிக்குப்பின் சன நடமாட்டம் நீங்கி கடைகளெல்லாம் பூட்டப்பட்ட தன் பின்பு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வன்னியிலிருந்து எரு ஏற்றிக்கொண்டு சாவகச்சேரி வீதியால் வந்து கொண்டிருந்த லொறிச் சாரதி ஒருவர் இந்த ஆலை தீப்பிடித்து எரிவதைக்கண்டு அயலவர்களுக்கு தெரியப் படுத்தியதை அடுத்து உடனடியாக மக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அருகிலிருந்த வீடுகளின் கிணறுகளிலிருந்து நீரிறைக்கும் இயந்திரம் மூலம் நீரை இறைத்து தீயை கட்டுப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

# இராசி பலன்

*11.09.2010*
*(ஆவணி 26, சனிக்கிழமை)*
*திருதியை முற்பகல் 9.56 மணி வரை*
*சித்திரை முன்னிரவு 9.35 மணி வரை*
*இராகுகாலம் 9.03 -10.33 மணி வரை*
*சுபநேரம் 3.03-4.33 மணி வரை*
*விநாயகர் சதுர்த்தி விரதம்*

**மேடம்** விருந்தினர் வருகையுண்டு, திருமண முயற்சி வெற்றிதரும், தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பழைய நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகளை காண வேண்டிய நாள், உடல்நலம் சீராகும், கடன் சுமை குறையும், உறவினர்கள் வருகை சிறப்பைத்தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்** பெருமைகள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், சான்றோர்களின் சந்திப்பு கிட்டும்.

**கடகம்** நம்பிக்கைகள் நிறைவேற தும்பிக்கை யானை வழிபட வேண்டிய நாள், வாகன யோகம் உண்டு, தொலைதூரச் செய்தி வந்து சேரும், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**சிங்கம்** வெற்றிகள் குவிய விநாயகப் பெருமானை வழிபட வேண்டிய நாள் செல்வாக்கு மேலோங்கும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், பூமியால் இலாபம் கிட்டும்.

**கன்னி** மக்கள் போற்றும் வாழ்வு அமைய விக்கினேஸ்வரனை வழிபடவேண்டிய நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சொத்து வாங்கும் எண்ணம் மேலோங்கும், உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**துலாம்** குடும்பத்தில் பெரியோரின் சொற்படி நடப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் சீராகும், திடீர் பயணத்தால் பணவரவு கிடைக்கும், கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** விழாக்களில் கலந்துகொண்டு மகிழ்ச்சியடைய வேண்டிய நாள், புகழ் கூடும், பெரியோரின் சந்திப்பு கிட்டும், பயணங்களால் பலன் உண்டு, வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு** எண்ணங்கள் நிறைவேற கணபதியை வழிபடவேண்டிய நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும்.

**மகரம்** தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தம் வந்து சேரும், அந்நியர்களின் சந்திப்பால் அனுகூலம் கிடைக்கும், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**கும்பம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், தந்தை வழி தனலாபம் உண்டு, பிரயாண நன்மையுண்டு.

**மீனம்** கவலைகள் தீர கஜமுகனை வழிபட வேண்டிய நாள், உறவினர் வழியில் சுப செயல்களைச் சந்திக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் தேவை.


வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 75 |
| தக்காளி | 120 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 70 | 70 |
| கரட் | 80 | 80 | 70 |
| பூசணி | 35 | 40 | 35 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 55 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 35 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 70 | 70 | 30 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 20 | 40 | 30 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 |
| போஞ்சி | - | 120 | - |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35 | 30 |







நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையில் யாழ். மாவட்ட விசேட கல்விப் பிரிவும் சுன்னாகம் வாழ்வகமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு செயலமர்வில் வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் உரையாற்றுவதையும் அருகில் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் நி.முருகானந்தன், பாடசாலை பிரதி அதிபர் திருமதி கா.சோதிநாதன், வாழ்வக செயலாளர் வி.கே.ரவிகரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முன்பள்ளி ஆசிரியர்களின் நடன நிகழ்வினையும் இதில் கலந்து கொண்ட பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சுன்னாகம் செய்தியாளர்)

## புதிய கிளைத் திறப்பு

Sky line information technology centre இன் புதிய கிளை வட்டுக்கோட்டை வீதி,சங்கரத்தை என்ற முகவரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக நிர்வாக இயக்குனர் அறிந்துள்ளார். (ஸ்ரீ-7-17)

## விநாயகர் சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக் கிழமை விநாயக சதுர்த்தி உற்சவமும் பகல் அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இன்றிரவு 7 மணிக்கு "விநாயகர் மகத் துவம்" எனும் பொருளில் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசனின் கதாப்பிரசங்கம் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)




## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 8,9 இற்கு வரலாறு பாடமும் தரம் 6 முதல் 11 இற்கு சங்கீதம் பாடமும் கற்பிக்கும் ஆசி ரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக் கிழமை காலை 8.30 மணிமுதல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் வரலாறு பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு புலோலி மெ.மி.த.க பாடசா லையிலும் சங்கீத பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகா வித்தி யாலய ஆசிரிய வள நிலையத்திலும் நடை பெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு குறித்த பாட ஆசிரி யர்கள் அறிவுரைப்பு வழிகாட்டியை கொண்டு வருமாறு வடமராட்சி வலய கல்வி அபிவி ருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்ப லிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-19)

# அச்சுவேலி பொலிஸ் நிலையத்தினால் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை

(அச்சுவேலி)

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தினால் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் சிறு பிணக் குக்கான தீர்வு,மருத்துவ சேவை என்பவற் றுடன் ஏனைய பொலிஸ் சம்பந்தமான சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்விற்கு கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமாதான நீதவான்கள் எனப் பலர் அழைக் கப்பட்டிருப்பதால்,பொதுமக்கள் தமது தேவை களை ஒரே இடத்தில் இலகுவாக சேவை களைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கி ன்றன. (ஸ்ரீ-2-70)

# சிவத்தமிழ் மானிடவியற் கழகத்தினால் உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ் மானிட விடியற் கழகம் என்ற அமைப்பினர் வன்னி மக்களின் துயர் துடைக்கும் நகர்வை ஆரம்பித்துள் ளதாக அவ் அமைப்பின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமொன்று கடந்த புதன்கிழமை மேற்படி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் வைத்திய கலாநிதிகளான சி.யமுனாநந்தா மற்றும் சுரேந்திரகுமாரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன் உட்பட பல மருத்துவ பீட மாணவர்கள் கலந்து கொண்ட னர்.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி, வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு விழிப் புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்குதல், உள ஆற்றுப் படுத்தல் செயற்பாடுகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி கருத்தரங்கு கள், அவர்களுக்கான ஊதியம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது.

மேலும் முற்றிலும் மனிதநேயப் பணி யாக மேற்கொள்ளப்படும் இச் செயற்பாடு களுக்கு நிதி உதவி அளிக்க விரும்பும் கருணை உள்ளம் படைத்தவர்கள், தன்னார் வத் தொண்டு நிறுவனங்கள், வர்த்தகர்கள் போன்றோர் நிதி உதவி அளித்து உதவுமாறு சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினர் வேண்டுகின்றனர்.

நிதி உதவி அளிக்க விரும்புவோர் நல்லூர் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள மேற்படி அமைப்பிடம் தொடர்புகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் வாரமளவில் கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 182 முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கு உளசமூக ஆற்றுப்படுத்தல் களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது . இதில் கரைச்சி, பளை, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களிலுள்ள முன் பள்ளி ஆசிரியைகளுக்கான விழிப்பூட்டல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-7)

## பாடசாலை உபகரணங்கள்,வர்ண தொலைக்காட்சிப்பெட்டி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அனர்த்த உதவி நிறுவனமும் சுயாதீன மனித உரிமை பணியகமும் இணைந்து வலி.மேற்கு அராலி பிரதேச பாலர் பாடசாலை மாணவர்ளுக்கான பாட சாலை உபகரணங்கள் வழங்கலும் அராலி கொட்டைக்காடு கிராமிய வைத்திய சாலைக்கு வர்ண தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஜனாதிபதி ஆலோசனை சபையை சேர்ந்தவரும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் இணைப்பதிகாரியுமான கலாநிதி ஜி.வி.ரி. திலகசிறி கலந்துகொள்ளவுள்ளதுடன் தற் போது யாழ்.மாவட்டத்தின் அரசியல் சமூக சிவில் பிரதிநிதிகளோடும் கலந்துரை யாடவுள்ளார். (ஸ்ரீ-3)

## சுனாமிப் பாதிப்பு குறித்த கூட்டம்

(அச்சுவேலி)

இலங்கை நிதி அமைச்சின் ஏற்பாட்டில் சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர் பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி முகாமை யாளர்கள் மற்றும் வெளிக்கள அலுவலர்கள் என பலர் கலந்துகொள்ளவுள்ளதாக பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ் தெரிவித்துள் ளார். (ஸ்ரீ-2-70)

# வேலணை வெள்ளைக்கடற்கரையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கோரிக்கை

(வேலணை)

வேலணை (சாட்டி) வெள்ளைக்கடற் கரைக்கு தற்பொது பெருமளவிலான உல் லாசப் பயணிகள் வருகைதருவதுடன் அம் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறை வேற்றிக் கொள்ள முடியாது பல அசௌக ரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவித் துள்ளனர்.

அதாவது இங்கு வருகின்ற உல்லாசப் பயணிகள் பொருட்களை வாங்குவதற்கு வியாபார நிலையங்களோ, கூட்டுறவுச் சங்கங்களோ எதுவும் இல்லை.

அத்துடன் வேலணை பலநோக்கு கூட்டு றவுச் சங்கத்தினர் தமது கிளையை நிறுவுவ தற்காக ஓர் தற்காலிக கட்டடத்தை அமைத் தனர். ஆனால் அது நீண்ட காலமாக திறக் கப்படாமல் காணப்படுவதாகவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மலசலகூட வசதிகள் இல்லாத நிலை காணப்படுவதாகவும் இம் மக்கள் மறைவிடங்களையும் பற்றைக்காடு களையும் நோக்கிச் செல்வதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் குறிப்பிடப் படுகிறது.

மேலும் கடல் அலைகளினால்அடித்துச் செல்லப்படும் கடற்தாவரக் கழிவுகள் கடற் கரைப்பகுதியில் குவிந்து கிடப்பதாகவும் இதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசமானது வேலணை உப பிரதேச அலுவலகத்தின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்பினர் மக்க ளின் தேவைகளை பூர்த்தி செய்வ தற்கான நடவடிக்கையை மேற்கொள்வ துடன் சுற்றுச்சூழல் மாசுபடுத்தலை தடுப்ப தற்குரிய நடவடிக்கையையும் மேற்கொள்ளு மாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-22)

# சாவ.பஸ் நிலையத்தை புனரமைக்க 4 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

மேற்படி பஸ் நிலையத்தின் கட்டுமான வேலைகளை ஆரம்பிப்பதற்காக மாகாண சபை உட்கட்டமைப்புநிதியிலிருந்து 4 மில்லியன் ரூபாயை ஆளுநர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இவ் வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு உள்ளூராட்சி ஆணை யாளர் ஜோசனிடம் ஆளுநர் தெரிவித்தார்.

இதில் உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி.விஜயலட்சுமி ரமேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-7)

# விடுதலைப்புலிகள் வெளிநாட்டு ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டனர்

## நல்லிணக்க ஆணைக்குழுவில் கடற்படைத்தளபதி சாட்சியம்

யுத்தகாலத்தில் கடல் வழியாக பொருட்களைக் கொண்டு செல்லவும் மக்களை கொண்டு செல்லும் செயற்பாட்டிலும் கடற்படை மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. மேலும் கடற்பரப்பில் புலிகளைப் பலவீனமடையச் செய்யும் செயற்பாடுகளும் எங்களால் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொண்டே நாங்கள் இந்தப் பணியில் ஈடுபட்டோம் என்று கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் திசரசமர சிங்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றுக் கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணை அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே திசர சமரசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கற்றுக் கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தலைமையில் கடந்த 8 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் அமர்வு ஆரம்பமாகியது. இது குறித்து திசரச்மரசிங்க அங்கு மேலும் கூறுகையில், மனிதாபிமான நடவடிக்கையில் கடற்படை பாரிய வகிபாகம் ஒன்றை வகித்தது. யுத்தகாலத்தில் வடக்கில் தரைப்பகுதியில் சில பிரதேசங்கள் அரசாங்கத்தரப்பிடம் இருக்கவில்லை. எனவே அந்தப் பகுதிகளில் கடலில் நடவடிக்கைகளை மேற்கொள்வது எங்களுக்கு பாரிய சிரமமாக இருந்தது.

மேலும் யுத்தகாலத்தில் வடக்கு பகுதிக்கான தரைப்பாதை திறந்திருக்கவில்லை. இதனால் வடபகுதிக்கு பொருட்களை கொண்டு செல்லல், மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுதல் என்பன கடல் மார்க்கமாகவே இடம்பெற்றது. முக்கியமாக கடற்படையினரின் துணையுடன் இது நடைபெற்றது.

புலிகள் வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட நவீன உபகரணங்களை கடலில் பயன்படுத்தினர். வெளிநாட்டு ஆயுதங்களை பயன்படுத்தினர்.

நவீன உபாயங்களை நடைமுறைப்படுத்தினர். அவர்களுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைத்தன. திட்டமிடப்பட்ட உதவிகள் கிடைத்தன. வெளிநாடுகளில் இருந்து உபகரணங்களை கடல் மார்க்கமாக கொண்டுவர முயற்சித்தனர்.

இவ்வாறு பல சவாலான விடயங்களுக்கு மத்தியில் நாங்கள் பணியாற்றினோம். முக்கியமாக எமது கடற்பரப்பை பாதுகாப்பது பாரிய விடயமாகவிருந்தது.

எனினும் நாங்கள் அவர்களின் செயற்பாடுகளை முறியடித்தோம். விசேடமாக நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகவிருந்தது. காரணம் துறைமுகங்கள் மீது தாக்குதல் நடத்த புலிகள் முயற்சித்திருந்தனர்.

யுத்த காலத்தில் வடக்குக்கு கடற்படையினரின் துணையுடன் கப்பல்கள் மூலமே உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன.மேலும் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது காயமடைந்த பொது மக்களை திருகோணமலை மற்றும் புல்மோட்டைப் பகுதிகளுக்கு கடற்படையினரின் துணையுடன் கப்பல்களில் கொண்டு சென்றோம்.


மக்களுக்குக் கொண்டு சென்ற பொருட்களை கப்பல்களிலிருந்து இறக்கும் போது அதன் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். எனினும் வடபகுதிக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்வது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகவே காணப்பட்டது.

இந்த விடயத்தில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோர் எம்முடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டனர்.

இதேவேளை யுத்தம் முடிந்துள்ள நிலையிலும் தற்போதும் இலங்கையின் கடற் பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தற்போது இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குள் வருவது அதிகரித்து விட்டது. இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குள் வந்து மீன்களை பிடித்துச் செல்கின்றனர். இதனால் எமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.அது பாரிய விடயமாக மாறி வருகின்றது. (ஶ்ரீ-2)

## சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுக்க விசேட தூதுவர் நியமனம்



கப்பல்கள் , படகுகள் மூலம் அரசியல் தஞ்சம் கோரி இலங்கைத் தமிழர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கின்றமையைத் தடுக்க ஆசிய பிராந்தியத்தில் விசேட தூதுவர் ஒருவரை கனடா நியமிக்கவுள்ளது.

கனேடியப் பாதுகாப்புப் புலனாய்வு சேவையின் பணிப்பாளராக முன்பு கடமையாற்றி இருந்த வோட் எல்கொக் என்பவரே இவ்விசேட தூதுவராக நியமிக்கப்படுகின்றார்.

இவர் இலங்கை, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு நேரில் விஜயம் செய்து இக்கப்பல்களையும், படகுகளையும் எப்படித் தடுத்து நிறுத்தலாம்? என்பது குறித்து பரஸ்பரம் பேசுவார். கனேடியக் குடிவரவுத் துறை அமைச்சர் ஜாசன் கெனி இத்தகவலை தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## தேடுதல் தொழில்நுட்பத்தினை விரைவுபடுத்தியது கூகுள் இணையம்

(சான்பிரான்ஸிஸ்கோ)

முன்னணி இணையத்தளமான கூகுள் தனது தொழிநுட்பத்தினை மேம்படுத்த தனது தேடுதல் தொழிநுட்பத்தினை மேலும் விரைவு படுத்தவுள்ளது.

உலகின் முன்னணி தேடுதல் இணையத் தளமாக கூகுள் உள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் இணைந்து இத்தகைய தொழிநுட்பத்தினை தொடங்கியுள்ளது.

கூகுளின் துணைத்தலைவர் மரிஸாமை யோர் கூறுகையில்,

கூகுள் தேடுதல் இணையத்தளம் வாயிலாக எந்த ஒரு செய்திகள், அது தொடர்பான விபரங்களை 2 தொடக்கம் 5 நொடிகளில் அதற்குரிய தேடுதல் பாக்ஸில் டைப் செய்து எளிதில் பெறலாம்.

உதாரணமாக காலநிலை மாற்ற விபரங்களை அறியவேண்டுமெனில் டபிள்யூ என டைப் செய்து அன்றைய காலநிலை மற்றும் வானிலை மாற்றம் குறித்த விபரங்களை பெறலாம். அதற்கான வெப்பேஜ்களில் இவை பொருத்தப்பட்டிருக்கும் ஒன்லைன் வாயிலாகவும் எளிதாக பயன்படுத்தலாம் என்றார். (ஶ்ரீ-2)

## ஆயுதக் களஞ்சியத்தில் வெடிவிபத்து

## 3 இராணுவத்தினர் காயம்

வவுனியாவிலுள்ள இராணுவத்தின் 211 ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தில் நேற்று பகல் இடம்பெற்ற வெடி விபத்தில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

ஆயுதக் களஞ்சியம் துப்புரவு செய்யப்பட்டபோது கிரனேட் ஒன்று தவறுதலாக வீழ்ந்து வெடித்ததில் இச்சம்பவம் இடம்பெற்றதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர். இவர்கள் தற்போது வவுனியா அரசினர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெடிச்சம்பவம் குறித்து இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஶ்ரீ-2)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT

FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)

FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

100% நல்ல சம்பளம்

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

➤ இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.

➤ உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை : G.C.E. (O/L) போதுமானது

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

(We guarantee minimum band 6.0 Upwards)

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPOKEN ENGLISH

இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகின்றது.

வகுப்புகள் சனி, ஞாயிறு, வாரநாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

Diploma in English | Advance Diploma Iin English

100 % பயிற்சி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

100 % வெற்றி

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)

(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)

Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

திகதி 10.09.2010 / 12.09.2010 / 15.09.2010

காலை : 10.00 மணி

மாலை : 04.00 மணி

# நாஸிகளின் யுகத்தில் கனடா!

## லிபரல் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அகதிக் கப்பல் களைத் தடுத்து நிறுத்த கனேடிய அரசினால் முன்னெடுக்கப்படவிருக்கும் கடும்போக்கான நடவடிக்கைகள் நாஸிகளின் யுகத்துக்கு உரியன என்று அந்நாட்டின் லிபரல் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அக்கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் பிரித்தானிய - கொலம்பிய தீவிரன் லிபரல் ரைடிங் அசோஸியேசன்ஸின் தலைவரான ரோன் மெக்கின்னன் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாஸிகள் யூதர்களின் விமானங்களை வானத்தில் பறக்கவிடாமல் தடுத்து நிறுத்த எடுத்திருந்த இறுக்கமான நடவடிக்கைகளையே அகதிக் கப்பல்களைத் தடுத்து நிறுத்த கனேடிய அரசு எடுக்க உள்ள இறுக்கமான நடவடிக்கைகள் நினைவுபடுத்துகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து சட்டவிரோத படகுகளையும் கப்பல்களையும் தடுத்துநிறுத்துவதற்கான சட்ட அதிகாரத்தை கனடா பெற்றுக்கொள்ளுதல், சட்டவிரோத பயணிகளை படகுகள், கப்பல்கள் போன்றவற்றில் ஏற்றிவருகின்ற கப்டன்மார், மாலுமிகள் மற்றும் சிப்பந்திகள் போன்றோருக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்குதல், படகுகளும் கப்பல்களும் பாரிய கடல்களை அடையும் முன்பாகவே இடைமறிக்கும் வகையில் இலங்கை போன்ற நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் என்று கனேடிய அரசினால் மேற்கொள்ளபட இருக்கின்ற இந்நடவடிக்கைகளை அவர் வன்மையாகக் கண்டித்ளதுள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சியின் இக் கடும்போக்கான திட்டங்கள் நாட்டில் கலவரங்களையே தோற்றுவிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாதெனக் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அகில இலங்கைக் கரைவலை உரிமையாளர் சங்கத்தின் 33ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இன்னும் சில நாட்களில் முழுக் கடற்படையினரும் கடலைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்து வோருக்குக் கடலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாதெனவும் சில இடங்களில் இத்தகைய உபகரணங்களைப் பயன்படுத்துவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணப் பாவனையைத் தடுப்பதற்கான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப் பாதுகாப்புச் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


# JAFFNA COLLEGE, VADDUKODDAI

## ADMISSION - 2011
## FOR GRADE 1 & GRADE 6

### மாணவர் அனுமதி - 2011
### தரம் 1 & தரம் - 6

1. (அ) விண்ணப்பப் படிவங்களை 15.09.2010 முதல் 30.10.2010 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 21.10.2010 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
   (இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் நிராகிக்கப்படும்.
   (ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 30.10.2010 சனிக்கிழமை, அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

2. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. தரம் 1 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் பிரதி (photo copy) இணைக்கப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப் படிவங்கள் ஞாயிறும், விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00மணி முதல் பிற்பகல் 1.00மணி வரை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒரு படிவத்திற்கும் பரீட்சைக்குமான கட்டணம் ரூபா 1000/-

6. வயதெல்லைகள்:
   (அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2005 இற்கும் 31.01.2006 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (ஆ) தரம் -6 விண்ணப்பதாரி 01.02.2000 ஆண்டில் அல்லது அதற்கு பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

7. பிரவேச நேர்முகப் பரீட்சை:
   (அ) தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சை 13.11.2010 மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
   (ஆ) தரம் - 6 இற்கான தேர்வுப் பரீட்சை 13.11.2010 மு.ப 9.00மணிக்கு ஆரம்பமாகும்.

மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகள் பெற்றுக்கொண்ட மாணவ மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புக்களுடனும் கூடிய விடுதி, நூலகப் பாவனை மற்றும் விளையாட்டு துறையில் சிறந்த பயிற்சி எம்மால் வழங்கப்படும்.

(சி-1136) அதிபர்.


# கியூபாவிலிருந்து பி.ரி.ஐ. பக்டீரியா இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கியூபாவில் உற்பத்தி செய்யப்பட்ட பி.ரி.ஐ பக்டீரியா இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பக்டீரியாக்கள் நேற்று முன்தினம் இரவு கொண்டுவரப்பட்டுள்ளதாக மலேரியா, டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் வைத் திய கலாநிதி சரத்தெனியகே தெரிவித்தார்.

இலங்கையர் அனைவரும் எதிர்பார்த் திருந்த பி.ரி.ஐ பக்டீரியாவை ஏற்றிய கப்பல் நேற்று முன்தினம் இரவு கொழும்பை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் 3 நாட்கள் விடுமுறையாதலால் இன்னும் 5 நாட்களில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பக்டீரியாக்களை துறை முகங்களிலிருந்து சுகாதார அமைச்சின் களஞ்சியங்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கியூபாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பக்டீரியாவை பயன்படுத்துவதற்கு முன்னதாக அதன் மாதிரிகளை கொழும்பு சுகாதார பரிசோதனை நிலையத்திற்கும் அனுப்பி வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிடைக்கும் தரச்சான்றி தழைக் கவனத்தில் கொண்டு விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பக்டீரியாவை பயன்படுத்த வேண்டிய விதம் குறித்து ஆலோசனைகள் வழங்கு வதற்காக கியூபாவிலிருந்து விசேட நிபுணர் ஒருவர் வருகை தந்துள்ளதாக வைத்திய கலாநிதி சரத் தெனியகே குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக ஆயிரம் லீற்றர்களை பயன்படுத்தி அதன் முன்னேற்றத்தை கண் காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. இந்த நடவடிக்கை வெற்றியளித்தால் நாட்டிலுள்ள அனைத்து பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக கியூபாவிலிருந்து இறக் குமதி செய்யப்பட்ட பி.ரி.ஐ பக்டீரியா பயன்படுத்தப்படும் என வைத்திய கலாநிதி மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# அமைச்சரவை தீர்மானங்கள்

**உள்ளூராட்சி மன்ற தேர்தல்**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் பழைய முறை உட்படுத்தப்பட்ட கலப்பு முறையில் நடத்துவதற்கான சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

**பாதுகாப்பு படையினருக்கான சீருடை**

அனைத்துப் பாதுகாப்பு தரப்பினருக்குமான சீருடைக்கான துணி வகைகளை உள்நாட்டிலேயே கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி ஆயிரத்து 686 மில்லியன் ரூபாவுக்கான சீருடை துணி வகைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

**உள்நாட்டு திரைப்படத்துறை பாதிப்பு**

வெளிநாட்டு திரைப்படங்களின் ஆதிக்கத்தால் உள்நாட்டு திரைப்படத்துறைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை தகவல் ஊடகத்துறை அமைச்சர் இது தொடர்பில் ஆராய திரைப்படக்கூட்டுத்தாபன தலைவர் குமார அபேசிங்க தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு நியமிக்கப்படவுள்ளது.

**கிழக்கின் உதயத்திற்கு 100 மில்லியன்**

கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின் கீழ் 100 மில்லியன் ரூபாவுக்கான மேலதிக உபகரணங்களை கொள்வனவு செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நீர்ப்பாசனம் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

**சிறுவர் மற்றும் மன அபிவிருத்தி**

சார்க் அபிவிருத்தி நிதிய உதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுவர் மற்றும் மன அபிவிருத்தி சேவையைப் பிரதேச மட்டத்தில் வலுவடையச் செய்ய அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு ஏற்ப இத் திட்டத்துக்காக 10 மாவட்டங்களின் வைத்திய சாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலை**

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகரவின் ஆலோசனைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் 272 மில்லியன் ரூபா செலவில் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் 1000 கைதிகள் தங்கக் கூடிய வசதி கொண்ட புதிய சிறைச்சாலை ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**வடக்கு கிழக்கு கம நெகும**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் ஆலோசனைக்கு ஏற்ப வடக்கு கிழக்கு கம நெகும கிராம எழுச்சித் திட்டத்தை 86 மில்லியன் டொலர் செலவில் இவ்வருடம் முதல் மூன்று வருடங்களுக்கு மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஸ்ரீ-2)

# பியசேன இறுதி நேரம் வரையில் தமது தீர்மானத்தை அறிவிக்கவில்லை

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன இறுதி நேரம் வரையிலும் தமது தீர்மானத் தை வெளிப்படுத்தவில்லை என கட்சியின் த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

இறுதிநேரத்தில் திடீரென ஆளும் கட்சிக்கு ஆதரவளித்தமை தொடர்பில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் நடை பெற்ற இறுதிக் கூட்டத்தின் போதும் நாடாளு மன்ற உறுப்பினர் பியசேன எந்தவித ான எதிர்ப்பினையும் வெளியிடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

18ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவளித்தது மட்டுமன்றி ஆளும் கட்சி யில் இணைந்து கொள்ளப் போவதாகவும் பியசேன அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

(ஸ்ரீ-2)

# உயர்நீதிமன்றத்தில் ஜே.வி.பியினரால் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் கடந்த 12ஆம் திகதி காலியில் வைத்து பொலிஸா ரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது என்று ஜே.வி.பி. பாரா ளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரி வித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர் களும் காலி பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த போது பொலிஸாரின் தாக்கலுக்கு உள்ளானார்கள் என்று ஹேரத் மேலும் தெரிவித்தார்.

அன்றைய தினம் கைதுசெய்யப்பட்டு தாக்குதலுக்குள்ளான கட்சி உறுப்பினர்க ளான அஜித்குமார நளின் ஹேவகே ஆகி யோரும் தாமும் மேற்படி சம்பவம் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துமாறு கடந்த ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்திலும் இரண்டு முறைப்பாடுகளை தாக்கல் செய்த தாகவும் ஹேரத் தெரிவித்தார்.

காலியில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போது மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பி னர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியது பற்றி முதலாவது முறைப்பாடும் காலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட் டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிசார் மீது இரண்டா வது முறைப்பாடும் செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக் கோரி காலியில் அரசாங்கத்திற்கு எதிராக கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முன்னணி ஆர்ப்பாட்டம் நடத்தியபோது பதற்றமான சூழ்நிலை நிலவியது.

ஜனநாயக தேசிய முன்னணி உறுப்பி னர்களான விஜித ஹேரத், நளின் ஹேவகே, அஜித் குமார ஆகியோர் பின்னர் பொலி ஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத ஆட்கடத்தல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் கனேடிய உயரதிகாரி இலங்கை விஜயம்

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கை களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஆசிய பிராந்தியத்திற்கான கனடாவின் முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் வார்ட் எலொக் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இவர் விஜயம் செய்ய உள்ள தாக கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை பகிர்ந்து கொள் ளும் நோக்கில் அவரது விஜயம் அமையும் எனக் குறிப்பிடப்படுகிறது.

அண்மைக்காலமாக கனேடியக் கடற் பரப்பிற்கு பிரவேசிக்கும் சட்டவிரோத புக லிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகவும் இதனை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்ட விரோத ஆட்கடத்தல் நடவடிக்கை களை கட்டுப்படுத்தும் வகையில் கனேடிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவு நவீன மயப் படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மணவாளக்கோல விழா

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதி ஸ்ரீபுவ னேஸ்வரி அம்பாள் ஆலய மணவாளக் கோல விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய குரு பிரம்மஸ்ரீ இரா.ஜெயபால சர்மா தலைமையிலான குழுவினர் கிரியை களை நடத்தவுள்ளனர். (ஸ்ரீ-2-70)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படும்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத் தப்படும் என ஊடக அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத் துவது குறித்து அரசியல் கட்சிகளுக்கு இடை யில் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டுள் ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி எதிர்வரும் உள்ளூராட்சி மன் றத் தேர்தல் விருப்பத் தெரிவு மற்றும் தொகுதி வாரி அடிப்படையில் நடைபெறவுள்ளது.


இதற்கான சட்டத் திருத்தங்கள் விரைவில் பாராளுமன்றில் நிறைவேற்றப்படவுள்ளதா கவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொகுதிவாரி அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனைத் திட்டத்திற்கு பெருவாரியான அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

உள்ளூராட்சி மன்ற எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டதன் பின்னர் தொகுதி வாரி அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப் படும் எனவும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல் லாவின் பரிந்துரைக்கு அமைய இந்த தேர்தல் முறைமை மாற்றம் நடைபெறவுள் ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார். (ஸ்ரீ-2)

# நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் சிறந்த சேவையை வெளிப்படுத்தமுடியும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை வரவேற்றப்பட வேண்டியதென வெளிவிவகார அமைச் சர் ஜீ.எல்.பீரிஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரினால் வெளிவிவகார அமைச்சருக்கு எதிராக நம் பிக்கை இல்லாப் பிரேரணையொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் எனது சேவையைச் சிறந்த முறையில் வெளிப்படுத்த முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு ஏற்படுத்த முயற்சிக்கப்பட்ட தீங்குகள் தொடர்பில் வெளிக்கொணர இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் பாரிய நெருக்கடிகளை எதிர் நோக்கி வருவதாகவும் இந்த நெருக்கடி வெளிப்பாடே இவ்வாறான அர்த்தமற்ற முயற்சிகள் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பூநகரியில் மீள் குடியேறிய விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கும் நடவடிக்கை

(பூநகரி)

பூநகரிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியேறி யுள்ள விவசாயிகள் அனைவருக் கும் இரண்டு ஏக்கருக்குரிய இரண்டு மூடை விதை நெல் மானி யமாக வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் ஆரம் பமாகி நடைபெறுகிறது.

பூநகரியில் உள்ளகட்டங் களும், வீடுகளும் முற்றாக சேதம டைந்த நிலையில் உள்ளதால் விதை நெல்லைக் களஞ்சியப் படுத்தி வழங்குவதில் பாரிய சிரமம் ஏற்படுவதாக கமநலசேவை அலுவலர் தெரிவித்தார்.

இதனால் விதை நெல்லைக் கொண்டு வந்தவுடன் உடனடியாக பொது இடங்களில் வைத்து விவசா யிகளுக்கு வழங்க வேண் டியிருப் பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதியில் 7500 க்கு மேற்பட்ட ஏக் கருக்குரிய விதை நெல் வழங்கப்பட உள் ளதாக விவசாயத் திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2-84)


உ
குகமயம்



காரைநகர் பயிரிக்கூடல் அருள் மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில்
புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நிகழும் விகிர்தி வருடம் ஆவணித் திங்கள் 27ஆம் நாள் (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமித்தியும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 7.24 மணி முதல் 8.24 மணி வரையுள்ள கன்னி இலக்கின சுப முகூர்த்தத்தில் எம்பெருமானுக்கும் பரிவாரமூர்த்தி களுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடாத்தத் திருவருள் பாலித்துள்ளது.

சகல கிரியைகளுக்கும் தலைமைதாங்கி நெறிப்படுத்துபவர்
சிவஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள் (ஆலயகுரு)

அடியார்கள் யாவரும் இக் கும்பாபிஷேகத்தையும் அதற்கு முன்னும், பின்னும் நடைபெறும் கிரியைகளையும் கண்டும் கேட்டும் தூய தவத்தால் பெற்ற மானிடப்பிறவியின் பயனை இனிதே பெறுவீர்களாக.

பயிரிக்கூடல்,
காரைநகர்.
30.08.2010.

(2442)

தொடர்ந்து மண்டலாபிஷேகமும்
மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவும் நடைபெறும்

இங்ஙனம்
முருகன் அடியார்கள்

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

12-III

## கொப்பழுகல் (Shoot rot)

மிளகாய் பயிரில் குறிப்பாக நாற்று மேடையில் ஏற்படும் நாற்றழுகல் நோயைப் பற்றியும் அதனைத் தவிர்ப்பதற்காக நாற்று மேடையை எவ்வாறு தயார் செய்யலாம் என்பது பற்றியும் விரிவாகப் பார்த்தோம். மிளகாய்ப் பயிர் உள்ளடங்கலாக நாற்று மூலம் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர்களிலும் நாற்றுமேடை தயாரிப்பு அவசியம் சரியானமுறையில் திட்டமிட்டு செய்யப்பட்டாலேயே சிறந்த நாற்றினை பெற்றுக் கொள்வதற்கு வழிகிடைக்கும்.

*நாற்று என்னும் அத்திவாரம் சரியாக இருந்தால் தானே நல்ல சிறந்த பயிர் எனும் கட்டடத்தைப் பெறமுடியும்.*



மிளகாய்ப் பயிரில் பாதிப்பை ஏற்படுத்தும் நோய்கள் வரிசையில் " கொப்பழுகல் -Shoot rot" எனும் நோயும் முக்கியமானது.

எவ்வளவோ இடர்களின் மத்தியில் நாற்று மேடையை தயார் செய்து விளை நிலத்தில் நடுகை செய்த பின்பு விளை நிலத்தில் அல்லது தோட்டத்தில் நடுகை செய்யப்பட்ட பயிரில் ஏற்படும் நோய்கள் பற்றியும் அவதானமாக இருக்கவேண்டும்.

நடுகை செய்த ஆரம்பத்தில் கொப்பழுகல் ஏற்படுவதில்லை குறிப்பாக நாற்றுக் கிளை வெடித்து கனதியாக வளரும்போதும் பூக்கும் காலம் வரையிலும் கொப்பழுகல் என்னும் நோயின் வெளிப்பாட்டை மிளகாய் செடியின் கொப்புகளில் காணமுடியும்.

ஆரம்பத்தில் கொப்புகளில் ஆங்காங்கே வாடல்போல காணப்படும் இந் நோயானது நாள் செல்லச் செல்ல அதனது பரவல் அதிகரித்து குறிப்பிட்ட கிளைப் பகுதியில் அழுகலேற்பட்டு சிறிது கருகிக் காணப்படும்.

நோய் அதிகரித்த நிலையில் தோட்டத்திலுள்ள மிளகாய்ப் பயிரில் தொட்டம் தொட்டமாகக் காணப்படும் கொப்பழுகலை கண்ணுற்ற விவசாயியின் மனமும் உடைந்து விடும். பாதிக்கப்பட்ட கிளைகளில் பூவோ காயோ எதுவுமேயிருக்காது. இக் கொப்பழுகல் நோய் பரவலாக மிளகாய்ச் செடியில் காணப்பட்டால் விளைச்சல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

### கொப்பழுகல் நோய்க்கான காரணி

மிளகாய்ச் செடியில் கொப்பழுகலை ஏற்படுத்துவது ஒருவகைப் பூஞ்சணமாகும். இந்நோயை ஒல்ற்றனேரியா சொலணி (Alternaria solani) என்ற பூஞ்சணம் தோற்றுவிக்கின்றது. ஆரம்பத்தில் நோய்த் தாக்கம் பார தூரமாக இல்லாது விட்டாலும் பூஞ்சணம் விருத்தியாவதற்கான சூழல் தகுந்ததாக இருக்கும் போது குறிப்பாக வளிமண்டல வெப்பநிலை குறைந்து ஈரப்பதன் அதிகரித் துக் காணப்படும் போது பூஞ்சண வித்தி முளைக்கத் தொடங்கும். அதிலும் வரட்சியான கால நிலை நிலவியபோதும் பனி பெய்யும் காலமானால் மிளகாய் செடியின் மேல் செறிந்து உருவாகும் பனித்துளி இலைகளில் கொப்புகளில் தங்கியிருக்கும் போது பூஞ்சண வித்தி முளைப்பதற்கான சூழல் சரியாக அமைந்துவிடும்.கிடைக்கும் ஈரப்பதனையும் குறைவான வளிமண்டல வெப்பநிலையையும் சரியான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ளும் இப் பூஞ்சணம் விரைவாக விருத்தியடைந்து கிளை முழுக்க பரவிவிடும்.

இதிலிருந்து பின்வருவனவற்றை இன்னும் அவதானித்துக் கொள்ளுங்கள்.

1. வளிமண்டல வெப்பநிலை குறைவடையும் காலம் நோய்த்தொற்று ஏற்படும்.

2.பனி பெய்யும்காலத்தில் இந்நோய்த் தொற்று இலகுவாக ஏற்பட வாய்ப்புண்டு. இங்கே கொப்பழுகலைத் தோற்றுவிக்கும் பூஞ்சணம் ஒரு மண்வாழ் பூஞ்சணமாகும். அதனால் மண்ணில் உள்ள தாவர மீதிப் பொருட்களில் அழுகல் வளரியாக வாழும் இப்பூஞ்சணம் காலநிலை ஏதுவாக இருக்கும் போது விரைந்து தொற்று ஏற்படுத்தி நோய் பரவத் தொடங்கிவிடும்.

3. அநேகமாக மிளகாய்ச் செடி நலிவுற்றிருக்கும் காலங்களிலேயே இவ்வாறான நோய் தீவிரமடைய வாய்ப்புண்டு. மிளகாய்ச் செடிக்கு தேவையான அசேதன பசளையை மட்டும் பயன்படுத்த வேண்டும். அதிகளவில் நைதரசனைக் கொண்ட தழைச் சத்தை இடக்கூடாது.

எங்களூர் விவசாயப் பெருமக்கள் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாக யூரியாவைப் பயன்படுத்துவதை அறியமுடிகின்றது.

அளவிற்கு அதிகமாக யூரியாவை இந் நோயேற்படும் காலங்களில் இடுவதைத் தவிர்ப்பது நல்லது அதேவேளையில் மிளகாய் பயிருக்குத் தேவையான பசளையையும் இடுதல் அவசியம்.

4. இக்கால கட்டத்தில் மழை பெய்தால்மண்ணில் ஓங்கியடிக்கும் மழைத்துளி மண்ணிலே அழுகல் வளரியாக வளர்த்து அதிக எண்ணிக்கையில் வித்தி களை உற்பத்தி செய்திருக்கும் இப் பூஞ்சணத்தினை வீசியடிப்பதால் வித்திகள் எகிறி நாலாபுறமும் பரவ ஏதுவாகிவிடும். இவ்வாறு எகிறி விழும் பூஞ்சண வித்திகள் மிளகாய் இலைகளிலும் கொப்புகளிலும் தேங்கியிருக்கும் மழைத் துளியிலோ பனித் துளியிலோ ஒட்டுப்பட்டிருந்து முளைக்கத் தொடங்கும்.

வித்தி முளைக்கும் போது பனித்துளியின் ஈரப்பதன் உதவி செய்வதால் நோய் விரைந்து இலைகளில் பரவ வாய்ப்பாகிவிடும்.

5. தொடர்ச்சியாக நீர்ப் பாய்ச்சலினாலும் பயிர்களுக்கிடையிலான ஈரப்பதன் அதிகரிக்க வாய்ப்புண்டு. நோய் தீவிரமாகும் காலங்களில் பயிர்களுக்கிடையிலான ஈரப்பதனை குறைப்பதற்கான வழிவகைகளை கையாளுவது நல்லது.

6. நோய் தீவிரமடைய ஆரம்பித்தால் ஏற்ற பூஞ்சண நாசினியை விசிறுவதே சிறந்தது. வருமுன் காப்பது எப்போதுமே நல்லது ஆயினும் நோய் தொற்று ஏற்பட்டபின் வேறு வழிகளால் கட்டுப்படுத்துவது கடினமாதலால் தகுந்த பூஞ்சண நாசினிகளைப் பயன்படுத்தவும்.

மான்கோசெப் 80% WP 20கி/10 லீற்றர் நீருக்கு

மான்கோசெப் 75% WG 20கி/10 லீற்றர் நீருக்கு

மனெப் 80% WP 20கி/10லீற்றர் நீருக்கு


தயபனேற்று மீதைல் 70% WP 6கி/10லீற்றர் நீருக்கு.

(தொடரும்)


# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

***யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயத் திணைக்களத்தினது விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சித் துறைகளுடன் விவசாய பீடமும் மற்றும் சித்த மருத்துவ துறையும் இணைந்து "விவசாயமும் சூழலும்" எனும் கருப்பொருளில் சூழலை முன்னிலைப்படுத்தி ஒரு சிறந்த கண்காட்சியினை திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இம்மாதம் 18,19,20 ஆம் திகதிகளில் நடாத்த இருக்கின்றனர்.***

***விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கத்துறையின் முழுவீச்சிலான செயற்பாட்டின் குறிப்பாக விவசாய உத்தியோகத்தர்கள், அலுவலர்கள் ஆகியோர் இணைந்த செயலூக்கத்தின் பெறுமதியாக கனதியான இக்கண்காட்சி அமைய இருக்கின்றது. பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் அவர்களின் நெறிப்படுத்தலில் நிகழவிருக்கும் இக்கண்காட்சி நிச்சயமாக விவசாயிகள்,மாணவர்கள்,அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் பெறுமதியான பல விடயங்களைப் பார்த்து, கேட்டு அறிந்து கொள்ளலாம். இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டு விடாதீர்கள்.***







மல்லாகம் வளர்மதி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லாரை பிரதேச குடும்பநல உத்தியோகத்தர் திருமதி.யு.உசா மங்கல விளக்கேற்றுவதையும் வினோத உடைப் போட்டியில் பங்குகொண்ட மாணவி ஒருவரையும் வெற்றிபெற்ற வீரருக்கு முன்பள்ளி ஆசிரியை பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - தெல்லிப்பளை செய்தியாளர்)

## யுத்தகாலத்தில் இராணுவம் சர்வதேச உதவி அமைப்புகளுடன் உறவைப் பேணியது

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இராணுவம் சர்வதேச உதவி அமைப்புகளுடன் நிலையான தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் குறிப்பாகச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையுடன் நிலையான தொடர்புகள் பேணப்பட்டதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூடிய படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணியமை தொடர்பில், ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே உறுதிப்படுத்துவாரென அவர் தெரிவித்தார்.

எந்த நேரத்திலும் எவ்வாறான விடயங்கள் தொடர்பிலும் தம்மிடம் வினவினால் தானோ அல்லது தமது ஊழியர்களோ பதிலளிப் பதாகக் கூறிய அவர் மனிதாபிமான நடவ டிக்கைகளில் இவ்வாறு சிறந்த தொடர்பாடலைப் பேணுதல் மிகவும் முக்கியமெனக் குறிப்பிட்டார்.

தமது நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச அமைப்புகள் திருப்தியுடன் செயற்பட்டதாகவும் தம்மை மேலும் ஊக்கப்படுத்தியதாகவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கிளிநொச்சியில் சாரணர் தளம் அமைப்பது குறித்து கலந்துரையாடல்



யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கு பயிற்சித் தளம் ஒன்று இதுவரை அமைக்கப்படாதிருந்தது.

இந்நிலையில் வடமாகாண சாரண இணைப்பாளரும் ஆணையாளரும் காங்கேசன்துறை முன்னாள் சாரணிய மாவட்ட ஆணையாளருமான நா. போஜன் தலைமையிலான குழுவினர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை நேற்று முன்தினம் சந்தித்து சாரணிய விடயங்கள் பற்றி கலந்துரையாடி கிளிநொச்சியில் சாரணர் தளம் ஒன்று அமைப்பதற்கான இடத்தைப் பெற்றுக் கொள்ள அனுமதி பெற்றுக் கொண்டனர்.

இணைப்பாளர் ந. போஜன் , காங்கேசன் துறை சாரணிய மாவட்ட ஆணையாளர் ந.இரவீந்திரன் , கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் ,உதவி மாவட்ட ஆணையாளர் (நிர்வாகம்), பொ. சிறீஸ்கந்தராசா , யாழ்ப்பாண சாரணிய உதவி மாவட்ட ஆணையாளர் செ. தேவரஞ்சன் ஆகி யோர் கொண்ட குழு ஆளுநரைச் சந்தித்த போது, யாழ்ப்பாணப் பகுதிக்கு சாரணிய தலைமைக் காரியாலயம் சகல வசதி நிறைந்த ஓர் இடத்தை ஏற்படுத்தும் படியும் அதற்கான வாடகையை வழங்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்.

மேலும் யாழ்ப்பாண பழைய பூங்காவுக்கு பிறமாவட்டத்தவர் வரும் போது மிக அழகான நிலையில் வைத்திருக்க சாரணர்கள் ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆளுநரின் பணிப்பாளர் தி.இராசநாயகம் , கிளிநொச்சியில் பயிற்சிக்களம் அமைப் பதற்கான காணி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதுடன் விரைவாக அமைவதற் கான மேற்பார்வைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். (ஸ்ரீ)

## இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2011/2012 ஆம் கல்வியாண்டுக்கான முயற்சியாண்மையும் சிறுவணிக முகாமைத் துவமும் சான்றிதழ் கற்கைநெறி(ESBM) ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறிக்கான தகைமை, ஆகக்குறைந்தது க.பொ.த. சாதாரண தரத்தில் இரு தடவைகளுக்கு மேற் படாமல் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத் தல் வேண்டும். மாணவர்கள் இவற்றுக் குரிய விண் ணப்பப்படிவங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

★ ★ ★

இலங்கை திறந்த பல்கலைக்கழத்தின் சமூக கற்கைகள் துறையினரால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறிக்கு (Certificate in Social Science) ,இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா(Diploma in Youth Development), கலைமாணி(BA in Social Science) , அபிவிருத்திக் கொள்கையில் முதுகலைமாணி ( MA in Development studies and public policy) ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 12 ஆம் எனவும் விண் ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)


## ஆவணிச் சதுர்த்தி உற்சவம்

(நல்லூர்)

ஆவரங்கால் கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை ஆவணி சதுர்த்தியும் நாளை ஞாயிற்றுக்கிழமை மணவாளக் கோலமும் நடைபெறவுள்ளதென ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-7-134)

## 11.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1297 -ஸ்டேர்லிங் பாலம் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஸ்கொட்லாந்துப் படையினர் ஆங்கிலேயரைத் தோற்கடித்தனர்.
- 1541 -சிலியின் சண்டியாகோ நகரம் மிச்சிமாலொன்கோ தலைமையிலான பழங்குடிகளினால் அழிக்கப்பட்டது.
- 1609 -ஹென்றி ஹட்சன் மான்ஹட்டன் தீவைக் கண்ணுற்றார்.
- 1649 - ஒலிவர் குரொம்வெல்லின் இங்கிலாந்து நாடாளுமன்றப் படைகள் அயர்லாந்தின் ட்ரொகேடா நகரைக் கைப்பற்றி ஆயிரக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 1708 - சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் மன்னன் தனது மாஸ்கோகோவின் மீதான படையெடுப்பை ஸ்மொலியென்ஸ்க் என்ற இடத்தில் இடைநிறுத்தினான். அவனது படைகள் 9 மாதங்களின் பின்னர் தோற்கடிக்கப்பட்டன.
- 1709 - பிரித்தானியா, நெதர்லாந்து, ஆஸ்திரியா ஆகியன பிரான்ஸ் மீது போர் தொடுத்தன.
- 1802 - பிரான்ஸ் சார்டீனியா பேரரசை இணைத்துக் கொண்டது.
- 1857 - யூட்டாவில் மெடோஸ் மலை படுகொலைகள் இடம்பெற்றன. நூற்றுக்கும் அதிகமான ஆர்கன்சஸ் குடியேற்றவாசிகள் கொல்லப்பட்டனர்.
- 1889 - யாழ்ப்பாணத்தில் இந்து சாதனம் (The Hindu Organ)என்ற ஆங்கிலப் பத்திரிகை டி.பி. செல்லப்பாபிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1893 - முதலாவது உலக சமய நாடாளுமன்ற மாநாடு சிக்காகோவில் ஆரம்பமானது.
- 1897 - எதியோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மன்னன் கஃபா இராச்சியத்தைக் கைப்பற்றினான்.
- 1906 - மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் என்ற சொற்பதத்தை தென்னாபிரிக்காவில் வன்முறையற்ற இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு பாவிக்க ஆரம்பித்தார்.
- 1916-கனடாவின் கியூபெக் பாலத்தின் மத்திய பகுதி உடைந்து வீழ்ந்ததில் 11 பேர் கொல்லப்பட்டனர்.
- 1919 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் ஹொண்டுராசினுள் நுழைந்தனர்.
- 1926 - பெனிட்டோ முசோலினி மீதான கொலைமுயற்சி தோல்வியடைந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பக்கிங்ஹாம் அரண்மனை ஜேர்மனியினரின் விமான தாக்குதலில் சேதமடைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டார்ம்ஸ்டாட் நகரில் இடம்பெற்ற பிரித்தானியரின் குண்டுவீச்சில் 11,500 பேர் கொல்லப்பட்டனர்.
- 1945 -இரண்டாம் உலகப் போர்: போர்ணியோ தீவில் ஜப்பானியரினால் அடைக்கப்பட்டிருந்த போர்க்கைதிகளை அவுஸ்திரேலியப் படையினர்விடுவித்தனர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 2 ஆயிரம் பேர் செப்டம்பர் 15இல் கொல்லப்படவிருந்தனர்.
- 1961 - டெக்சாஸை 4ம் கட்ட சூறாவளி கார்லா தாக்கியது.
- 1968 - பிரான்சில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 95 பேர் கொல்லப்பட்டனர்.
- 1973 - சிலியின் மக்களாட்சி அரசு இராணுவப் புரட்சியில் கவிழ்க்கப்பட்டது. ஜனாதிபதி சல்வடோர் அலெண்டே கொல்லப்பட்டார். இராணுவத் தலைவர் ஆகுஸ்டோ பினொச்சே ஆட்சியைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சியை நடத்தினார்.
- 1974 -வட கரோலினாவில் விமானம் ஒன்று விழ்ந்ததில் 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 1982 -பாலஸ்தீன அகதிகளின் பாதுகாப்புக்கென வந்திருந்த பன்னாட்டுப் படைகள் பெய்ரூட் நகரை விட்டு அகன்றனர். ஐந்து நாட்களின் பின்னர் அங்கு பல்லாயிரக்கணக்கான அகதிகள் கொல்லப்பட்டனர்.
- 1989 -ஹங்கேரிக்கும் ஆஸ்திரியாவுக்குமான எல்லை திறந்து விடப்பட்டதில் ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மனி மக்கள் தப்பியோடினர்.
- 1992 - ஹவாய் தீவை சூறாவளி பலமாக தாக்கியதில் தீவு பலத்த சேதத்தைச் சந்தித்தது.
- 1997 - ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்கிய தனியான ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தை அமைக்க ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களித்தனர்.
- 2006 -ஜேர்மனியின் முதல் 24 மணிநேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.


### பிறப்புகள்

- 1862 - ஓ ஹென்றி, ஆங்கில எழுத்தாளர் (இ. 1910)
- 1917 - பேர்டினண்ட் மார்க்கோஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (இ. 1989)
- 1982 - ஷ்ரியா சரண், தென்னிந்திய நடிகை

### இறப்புகள்

1921-சுப்பிரமணிய பாரதியார்,(பி.1882)
1948-முகமது அலி ஜின்னா,பாகிஸ்தான் தாபகர்
1971-நிக்கிட்டா குருசேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (பி.1894)
1973-சல்வடோர் அலெண்டே,சிலியின் ஜனாதிபதி(பி.1908)
2009-யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர்(பி.1927)

உலகையே அதிரவைத்த 2001 செப்டெம்பர் 11 தாக்குதல் -நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீது நடத்தப்பட்ட விமான தாக்குதல்களில் மொத்தம் 2974 பேர் கொல்லப்பட்டனர்.



# ஈழத்தவர் வரலாறு

32

## 5. யாழ்ப்பாண இராச்சியம் ஆரியச்சக்கரவர்த்திகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

கைலாயநாதருக்கும் உமையவளுக்குமென் இருவேறான உயர்ந்த பெருங் கோயில்களையும் இவற்றோடு மூன்று சபைகள்,பரிவாரத் தேவர்களுக்கான மாடங்கள், உக்கிராணசாலை, யாகசாலை, சுற்றுப் பிரகாரம், தேரோடும் வீதி, மடம் அன்னசத்திரம் முதலியவற்றையும் மிகச் சிறந்த முறையிலே அமைப்பித்தான் என்று சொல்லப்படுகின்றது. அத்தோடு தனது தலைநகரின் கீழ்த்திசையில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், வடதிசையில் சட்டநாதர் கோயில் , தையல் நாயகியம்மன் கோயில், சாலைவிநாயகர் கோயில் முதலியவற்றையும் கட்டுவித்தான்.இவற்றிற் சிலவற்றைப் பிற்காலத்திற் சிம்மாசனத்திலிருந்த பரராசசேகரன் கட்டுவித்ததாகக் கூறுவர். உண்மையில் சிங்களப் படைகளால் அழிக்கப்பட்ட இக் கோயில்களைப் பரராசசேகரன் புனருத்தாரணம் செய்தான் எனக்கொள்வதே ஏற்றதாகும்.



அம்மன் சிலை(மரத்தாலானது) நல்லூர்



தெட்சணாமூர்த்தி சிலை -நல்லூர்

யாழ்ப்பாண நகரிக்கு உத்தரதேச இராசதானி மாறியதும், அது புதிய நகரகாவும் புதிய இராசதானியாகவும் இருந்ததாலும், ஏற்கனவே குடாநாட்டிலிருந்து பெருந்தொகையான பௌத்தர்களும் சிங்களவரும் தென்புலம் பெயர்ந்து விட்டமையாலும் புதிய யாழ்ப்பாண இராசதானிக்கு மக்கள் தேவைப்புட்டார்கள். நிலவளத்திற்கு ஏற்ப மனிதவளம் குறைந்து காணப்பட்டது. தென்புலம் பெயர்ந்த மக்களது தோட்டங்களும் வயல்களும் வதிவிடங்களும் மக்களின்மையால் தூர்ந்துபோகத் தொடங்கின. எனவே, யாழ்ப்பாண இராச்சியத்தின் சமூக பொருளாதார அரசியற் படைப்பலத்தை கட்டியெழுப்புவதற்கு வேறிடங்களிலிருந்து மக்களைத் தருவித்துக் குடியேற்றங்கள் நிறுவுவது அத்தியாவசியமாகியது. எனவே யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன் விசயகாலிங்க ஆரியன் தென்னிந்தியாவிலிருந்து மக்களை இங்கு குடியேற்ற வரவழைக்க நேர்ந்தது. இதனையே யாழ்ப்பாண வைபமாலை, கைலாயமாலை முதலான நூல்கள் விபரிக்கின்றன.

திருநெல்வேலி, புலோலி, பச்சிலைப் பள்ளி, தொல்புரம், கோயிலாக்கண்டி , நெடுந்தீவு , பல்லவராயன்கட்டு, இணுவில், இருபாலை, தெல்லிப்பழை, மயிலிட்டி முதலான ஊர்களில் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

அத்தோடு வன்னியர்கள் குடியேற்றமும் நிகழ்ந்தது. கரிக்கட்டு மூலைப்பற்று, முள்ளியவளை, மேல்பற்று, மேற்கு மூலை, கிழக்கு மூலை, திரியாய், கச்சாய், கட்டுக்குளம், திருகோணமலை, தம்பலகாமம், கொட்டியாரம், துணுக்காய், இத்திமடு, நெடுங்கேணி, நொச்சிமுனை, புல்வெளி, தனிக்கல் முதலான உத்தரதேசத்தின் பகுதிகளில் வன்னியர்கள் குடியேறினார்கள்.

பொன்பற்றியூரைச் சேர்ந்த பாண்டிமழவன், செண்பகமழவன் ஆகியோர் திருநெல்வேலியில் குடியேறினர். அதேயூரைச் சேர்ந்த கனகமழவன் புலோலியிலும், கச்சூரைச்சேர்ந்த நீலகண்டன் பச்சிலைப் பள்ளியிலும், திருவொள்ளூரைச் சேர்ந்த கூபகாரேந்திரன் தொல்புரத்திலும், புல்லூரைச் சேர்ந்த தேவராயேந்திரன் கோயிலாக் கண்டியிலும், மதுராந்தகத்தைச் சேர்ந்த இரு மரபுந்துய்ய தனிநாயகன் நெடுந்தீவிலும், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பல்லவராயன் பல்லவராயன்கட்டிலும், திருக்கோவிலூரைச் சேர்ந்த பேராயிரமுடையான் இணுவிலிலும், மண்ணாடு கொண்ட முதலி இருபாலையிலும் , காயல்பட்டினத்தைச் சேர்ந்த கனகராயன் தெல்லிப்பழையிலும், காவிரியூரைச் சேர்ந்த நரசிங்கதேவன் மயிலிட்டியிலும், வாலிநகரைச் சேர்ந்த செண்பகமாப்பாணன், சந்திரசேகரமாப்பாணன் ஆகியோர் தெல்லிப்பழையிலும் குடியேறினர்.

இக்குடும்பங்கள் தத்தமது அடிமை குடிமைகளுடன் அவ்விடங்களில் வந்து குடியேறினர்.அத்தோடு தலையாரி முதலிய தலைவர்களை நியமிக்க விரும்பி, இமையனமாதாக்கனை வடபற்றுக்கும், வெற்றிமாதாக்கனைத் தென்பற்றுக்கும், செண்பகமாதாக்கனை கீழ்ப்பற்றுக்கும் நியமித் தான். வெற்றிமாதாக்கன் என்பவன் சேனைத் தளபதியாகினான்.

சிங்கையாரியன் (விசய காலிங்கன்) காலத்து யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் ஏற்பட்ட தமிழர் குடியேற்றத்தின் பிரதான கட்டத்தையே கைலாயமாலை, வையாபாடல் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பிரதேசங்களின் ஆதிக் குடிகளான நாகர்களுடன், தென்னகத்திற்கும் ஈழத்திற்குமிடையில் பல நூற்றாண்டுகளாக நிலவிய தொடர்பின் விளைவாகவே ஈழத் தமிழகம் உருவாகியது. தென்னாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்த வணிகர் சிங்கள மன்னரின் அழைப்பில் வந்த தென்னாட்டுப் போர்வீரர், முத்துக்குளிக்க வந்த பரவர் முதலிய மீனவர், தமிழ்நாட்டிலிருந்து படையெடுத்து வந்த போர்வீரர் முதலியோரின் பிற்சந்ததியினரே ஈழத்தமிழ்க்குடிகள் ஆவர். (தொடரும்)

# இந்திய மொழிகளின் மொழி பெயர்ப்பு

02

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை



கே.மலர்விழி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பெங்களூர் பல்கலைக்கழகம்

அதுபோன்று நமது நாட்டின் சொத்தாக விளங்கும் வள்ளுவர் மற்றும் சர்வக்ஞா அவர்களின் கருத்திற்கு

உதாரணமாக,

சர்வக்ஞா :- கழுதை சாம்பலில் புரண்டு குளித்தாலும் அது ஞானியாக முடியுமா?

தத்துவம் அறியாமல் விபூதி இட்டால உண்மையான கழுதைபோல் சர்வக்ஞா

வள்ளுவர்: இதற்கு ஒப்புமையோடு திருக்குறளில் கி.மு. திருவள்ளுவர்

'கூடா ஒழுக்கம்' என்ற அதிகாரத்தில

'வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று'

என்ற குறளின் மூலம்

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம், பசு, புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றது என்கிறார்.அதுபோல்,

'புறங்கூறாமை' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர்

வள்ளுவர்: புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர்வாழ்வதை விட அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல் அறநூல்கள் சொல்லும் உண்மை என்கிறார்.

சர்வக்ஞா: ஒருவன் பொய் பேசி வாழ்வதைவிட 500 பசுக்களை கொல்பவன் மேல்.

பொய் பேசி வாழ்வதை விட பசித்து சாவதுமேல்,

பொய் பேசி புகழோடு வாழ்வதை விட பன்றி பெய்த மலம் மேல் சர்வக்ஞா.

என்று சர்வக்ஞா கூறுகிறார்.

'கூடா ஒழுக்கம' எனும் அதிகாரத்தில்

வள்ளுவர் : 'மனத்தது மாசாக மாண்டார் நீராடி' என்ற குறளில்

மனத்தில் மாசு இருக்கத் தவத்தால் மாண்பு பெற்றவரை போல் நீரில் முழ்கி மறைந்து நடக்கும் வஞ்சனை உடைய மாந்தர் உலகில் பலர் உள்ளனர் இதற்கு ஒப்பாக

சர்வக்ஞா: நித்தம் நீராடி ஒருவன் சொர்க்கத்தை அடைவான் என்றால், ஜலத்தில் நீராடி தன் வாழ்வைக் கழிக்கும் தவளை ஏன் சொர்க்கத்தை அடையமுடிவதில்லை ?

என்று சர்வக்ஞா கூறுகிறார்.

3) *மொழி பெயர்ப்பின் தாக்கம்*

"இந்திய மொழிகளில் சமஸ்கிருத மொழியை அடுத்து,பிற இந்திய மொழிகளில் தமிழ் மொழியே மிகத் தொன்மையான இலக்கிய வரலாற்றைக் கொண்டுள்ளது. (Tamil Sahitya Chartitre Munnudi/Preface)

பண்டைய இலக்கியங்களான இராமாயணம், மகாபாரதம் மற்றும் சமஸ்கிருதத்தின் பஞ்சதந்திரகதைகள் இந்திய பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஆதி மொழியான சமஸ்கிருதமும், அழகியல் மொழியான வங்காள இலக்கியங்களும் பிற இந்திய மொழிகளில் செல்வாக்கு செலுத்தியதாலேயே பிற்காலத்தில் நவீன மொழி பெயர்ப்பு கலாசாரம் தோன்றியது.

ஆங்கிலேயர் வருகையும், அச்சு இயந்திரத்தின் அறிமுகமும் இந்திய இலக்கிய வரலாற்றிலும், மொழி பெயர்ப்பிலும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதென்பது ஆணித்தரமான உண்மை.

சமஸ்கிருத மொழியில் ஓரளவு தேர்ச்சி பெற்ற பாரதியார், தாகூரின் எட்டு சிறுகதைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்துள்ளார். அதேபோல் வ.வே.சு. ஐயரும் "காபுலிவாலா" என்ற தாகூரின் சிறுகதையை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு "காபூல்காரன" என்ற தலைப்பில் வெளியிட்டார், இவ்விரு மொழி பெயர்ப்பின் பின்னணி ஆரம்ப கால நவீன சிறுகதை இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல் எனலாம். (தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும். Page - 40)


கன்னடத்தில் முதல் சமஸ்கிருத நாவலின் மொழி பெயர்ப்பு பாணனுடைய காதம்பரி என்ற நாவலின் மொழி பெயர்ப்பிலிருந்து தோன்றியது.

தெலுங்கு அறிஞர்களின் ஆய்வுப்படி, 11ஆம் நூற்றாண்டில் பிரசுரமான நன்னயனுடைய மகாபாரதத்தின் மொழி பெயர்பின் மூலமாகவே தெலுங்கு மொழியின் இலக்கிய வரலாறு ஆரம்பமானது என ஆய்வுகள் கூருகின்றன. (Bhartheeya Sahitya Sameekshe Page - 915)

நவீன இலக்கிய வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்தில் கலாசார மறு மலர்ச்சியும், மதபோதனை சம்பிரதாயங்களும் போத்துக்கீச, பிரித்தானியர் வருகையால் புதுவடிவம் பெற்றது.

1546 இல் இந்தியாவிற்கு வந்த போத்துக்கீச பாதிரியாரான ஹன்ரிக் ஹென்ரிக்ஸ் தமிழைக் கற்று "டோக்டரினா கிறிஸ்டினா" "Doctrina Christina" என்ற கிறிஸ்தவ நூலை "தம்பிரான் வணக்கம" என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார், மற்றும் வீரமாமுனிவர் கூட பல மொழி பெயர்ப்பு இலக்கியங்களை செய்துள்ளார். (தொடரும்)

# பிரசன்ன விதானகேயின் ஆகாயப் பூக்கள்



## ஆகாஸ குஸும் திரைக்கதை

63 ஆவது வயதில் அடியெடுத்து வைத்துள்ள நமது நாட்டின் திரைப் படத்துறையை நாம் இலங்கைத் திரைப்படத் துறை என அழைத்த போதிலும் அது ஆரம்பம் தொட்டே சிங்கள திரைப்படத்துறையாகவே இருந்து வந்துள்ளது. கடந்த காலத்தில் மொத்தம் 1040 சிங்களத் திரைப்படங் களை நாம் உருவாக்கியிருந்த போதி லும் மொழி மாற்றம் செய்யப்பட்ட திரைப்படங்கள் அடங்கலாக இந் நாட்டில் 40 தமிழ்த் திரைப்படங்கள் மாத்திரமே இதுவரை உருவாகியுள் ளன. நாட்டின் மொத்த சனத்தொகை யில் பத் தொன்பது சதவீதமானோர் தமிழ் பேசும் மக்களாக இருக்கின்ற நிலையில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பில் இவ் எண்ணிக்கையானது எந்த வகையிலும் போதுமானதல்ல என்பதை அடித்துக் கூறவேண்டியதில்லை.

சிங்கள சினிமாவின் ஆரம்ப காலகட்டத்தில் முன்னணி திரைப்படத் தயாரிப்பாளர்களாகவும், விநி யோகஸ்தர்களாகவும் தமிழர்கள் இருந்த போதிலும், அவர்கள் புகழ் பெற்ற தென்னிந்தியத் திரைப்படங் களை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்தனரே தவிர இலங்கைத் தமிழ் சினிமாவினைக் கட்டியெழுப்ப முயற் சிக்கவில்லை.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட இலங்கைத் தமிழ் திரைப் படத்துறை, முதலீட்டை மேற்கொள்ள உகந்ததல்ல என அவர்கள் கருதியமையும் காரண மாக இருந்திருக்கலாம்.

ஆயினும் சிங்கள சினிமாவின் திருப்பு முனையாக அமைந்த பல முக் கியத் திரைப்படங்களுக்கு தமிழர்கள் வழங்கிய தயாரிப்புப் பங்களிப்பை இங்கு கௌரவத்துடன் குறிப்பிடுதல் வேண்டும். 1983 ஆம் ஆண்டில், அதுவரை நம் நாட்டில் தயாரிக்கப் பட்ட தமிழ்த் திரைப்படங்களும் அவர் களுக்குச் சொந்தமாக இருந்த படப்பிடிப்புக் கூடங்கள், திரையரங் குகள் ஆகியனவும் தீயிடப்பட்டமை யானது நம் நாட்டின் திரைப்படத் துறையில் ஏற்பட்ட பெரும் துன் பியல் சம்பவமாகும்.

இன்று உலக மய மாதல் காரணமாக சிறிய நாடுகளின் தேசி யத் திரைப்படத் துறை முடக்கப்பட்டுள்ள அதேவேளை, அந்த நாடுகளில் சில திரைப்பட இயக்குநர் களுக்கு தமது தாய்நாட்டு சினிமா எல்லை களைக் கடந்து செல்லும் வாய்ப் பினையும் ஏற்படுத்தியுள்ளது. தென் இந்தியாவின் தூரத்து கிராமங்களில் வாழும் திரைப்பட மோகம் கொண்ட இளைஞர்களும் யுவதிகளும் டீவீடி மற்றும் இணையத்தளம் வாயிலாக உலக சினிமாவை ரசிப்பதுடன், குறுந்திரைப் படங்களை தயாரித்து அவற்றை இணையத்தளங்களுடன் இணைத்து விடுகின்றனர்.

நமது நாட்டின் நிலைமையும் அதற்கு மாறுபட்டதல்ல. யுத்த நிறுத்த உடன் படிக்கை அமுலில் இருந்த போது எனது திரைப்படங்களுடன் வடக் கிற்கு சென்ற நான், சினிமாவை தமது உணர்வுகளின் வெளிப்பாடு(Self ex-pression) ஊடகமாக தெரிவு செய்ய ஆர்வம் கொண்டிருந்த அநேகமான இளைஞர்களை சந்தித்தேன்.

எனது "புற ஹந்த கலுவர" ஒரு முழு நிலவு நாளின் போதான மரணம் திரைப்படத்தின் ரசிகர்களாகிய அவர்கள், நானும் அசோக ஹந்தகம வும் செல்லும் பாதையில் பயணித்து, இலங்கைத் தமிழருக்கு உரித்தான தமிழ் சினிமாவை உருவாக்க கனவு கண்டுகொண்டிருந்தனர்.

யுத்தநிறுத்தம் முறிந்ததன் பின் ஏற்பட்ட பயங்கர யுத்தத்தின் போது அவர்கள் எங்கு இருக்கிறார்களோ என்ற எண்ணம் என்னுள் எழுந்து உறுத்தியது.

ஆனால் அண்மையில் அகதி முகாம்களிலிருந்து தமது வீடு களுக்குத் திரும்பிய அவர்கள் தொலைபேசி மூலம் என்னுடன் பேசி னார்கள்.

எதிர்காலத்தில் அவர்களின் உணர்வுக் குரல் சினிமாவில் ஒலிக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்த னையாக உள்ளது. வெளிப்படுத்தத் துடிக்கும் ஆயிரமாயிரம் கதைகள் அவர்களினுள் தேங்கிக் கிடப்பதை நான் அறிவேன்.

"ஆகாஸ குஸும்" திரைப்படத் தைத் தமிழ் மொழியில் தயாரித்து, அதன் திரைக்கதையை தமிழாக்கம் செய்து உங்கள் முன் வைப்பதன் நோக்கம், எனது உணர்வுபூர்வமான படைப்பாற்றலின் வெளிப்பாட்டை உங்களுடன், உங்கள் தாய்மொழியில் பகிர்ந்து கொள்ள என்னுள் இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துவதேயா கும்.

எனது இந்த முயற்சியானது நமது நாட்டின் தமிழ் சினிமாவை உருவாக்க உறுதிபூண்டு உழைக்கும் இளம் உள்ளங்களை ஊக்குவிக்க உதவியாக உந்துசக்தியாக அமையுமாயின் அதுவே எனக்கு ஆறுதலாகும்.

**பிரசன்ன விதானகே**

ஆகாஸ குஸும் திரைக்கதையை தமிழாக்கம் செய்த ரவி ரத்னவேல் அவர்களுக்கும், அதனை வெளியிடும் பொறுப்பை ஏற்ற சிட்னி மாகஸ் டயஸ் அவர் களுக்கும் இவ்விடத்தில் துணை நின்ற அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

### கதைச்சுருக்கம்

சந்தியா ராணி ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான நடிகையாக இருந்தவள். வயோதிபம் நெருங்கி, திரைச்சூழலிலிருந்து விலகி தனிமையில் வாழ்கிறாள். தற்போது பிரபலத்திலிருக்கும் நடிகர், நடிகைகள் தமது "இரகசிய உறவை" தொடர, சந்தியா ராணியின் இல்லத்தை நாடுகிறார்கள். ஒரு அறையை ஒதுக்கித்தந்து பெறும் வாடகைப் பணத்திலும் சிறு தொழில் ஒன்றின் மூலமாகக் கிடைக்கும் ஊதியத்திலும் சந்தியா ராணி தனது வாழ்வுப் பொழுதை கடத்திக் கொண்டி ருக்கிறாள்.

இந்நிலையில், ராணியின் இல்லத்திற்கு ஷாலிகா என்னும் நடிகை தனது காதலனுடன் தங்க வருகிறாள். அவளது கணவனுக்கு இந்த இரகசிய உறவு தெரிந்து விட, சந்தியா ராணியின் இல்லத்திற்கு காவல்துறை வருகிறது. ஷாலிகாவின் உறவு அம்பலமாகிறது. சூழலால் மறக்கப்பட்டிருந்த சந்தியா ராணி யின் பெயர் வெளியுலகிற்கு மீண்டும் தெரியவருகிறது.

பிரியா நடன விடுதியில் வேலை செய்பவள். ஒருமுறை விடுதியில் சண்டை மூள, பிரியா காவல்துறையின் விசாரணைக்கு உள்ளாகிறாள். யாரும் எதிர்பாராத விதமாக, அவள் தன்னை "சந்தியா ராணியின் மகள்" என்று அறிமுகம் செய்து கொள்ள ,சந்தியா ராணியிடம் தொலைபேசி மூலம் காவல்துறை கேட்கிறது. அவள், "தனக்கு திருமணம் ஆகவில்லை என்பது நாட்டிலுள்ள அனைவருமே அறிந்த ஒன்றுதானே" என்று சிரித்தபடி கூறி மறுக்கிறாள்.

எனினும் அன்றிரவு சந்தியா ராணியினது உறக்கம் பறி போகிறது. உடன் தங் கியிருக்கும் ஷாலிகாவிடம் தனது கடந்தகால வாழ்வைப் பற்றி ஆற்றாமையுடன் உரையாடுகிறாள். சிறுவயதிலேயே அவளுக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தை இருந்ததையும் நடிக்க வந்ததன் காரணமாக கணவரையும் மகளையும் பிரிய நேரிட்டதையும் பற்றி விவரிக்கிறாள்.

பின்பு ஷாலிகாவின் உதவியோடு பிரியாவைத் தேடி அலைகிறாள். தன்னுறவை மறுத்து விட்ட சந்தியா ராணியிடமிருந்து பிரியா விலகியோடுகிறாள். இருவ ருக் குமிடையே முரண்பட்டுவிட்ட தாய்-மகள் உறவின் பின்னிருக்கும் பரிதவிப்பையும், அதனுள் வளர்ச்சியற்ற துளிராக தேங்கியிருக்கும் உள்ளார்ந்த நேசத்தையும் பற்றிய கதையாடலே "ஆகாயப் பூக்கள்" திரைப்படத்தின் மைய இழையோட்டம்.






"ஆகாயப் பூக்கள்" பெற்ற சர்வதேச விருதுகள்...

- வெள்ளி மயில் விருது- மாலினி பொன்சேகா
  2008 சர்வதேச இந்திய திரைப்பட விழா
- சிறந்த நடிகை மாலினி பொன்சேகா
  2009 சர்வதேச லெவாந்தே திரைப்பட விழா-இத்தாலி
- ஆசியாவின் சிறந்த திரைப்படத் திற்கான நெட்பெக் விருது
  2009 க்ரணாடா சர்வதேசதிரைப்பட விழா- ஸ்பெயின்
- ஜூரியின் கௌரவிப்பு
  2009 பிரெஞ்சு நாட்டு வெசூல் சர்வதேச திரைப்பட விழா





செலிங்கோ ஆயுள் காப்புறுதியின் மேம்படுத்தப்பட்ட சாவகச்சேரிக் கிளைத் திறப்பு விழாவில் முகாமைத்துவ பணிப்பாளர் ஆர். ரங்கநாதன் நாடாவெட்டி கிளையைத் திறந்து வைப்பதையும் தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷாரா ரணசிங்க, ரி. விஜயநாத், வி.சுதர்சன், ரி.நிரோஜன் ஆகியோர் அருகில் நிற்பதையும் வாடிக்கையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கி செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

## இலங்கையின் அரசியல் சூழ்நிலை குறித்து

# இந்தியாவிடம் அறிக்கை கோரியுள்ளது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் சூழ்நிலைகள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்திடம் அமெரிக்கா அறிக்கையொன்றை கோரியுள்ளது.

இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் அரசியல் நிலைமைகள் பிராந்தியத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனை தெளிவுபடுத்துமாறு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் இந்தியாவிடம் கோரியுள்ளது.

யுத்தத்தின் பின்னரான நடவடிக்கை கள், வெளிவிவகாரம், அரசியல் சாசனத் திருத்தங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இந்தியாவிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று தினங்களுக்கு மு ன்னதாக இந்த அறிக்கை தொடர்பான கோரிக்கையை அமெரிக்க ராஜாங்கத் திண்ணக்களம் விடுத்துள்ளதாகவும் இந்திய அரசாங்கம் அந்த அறிக்கைஃயைத் தயாரித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பிலும் தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை அண்மைக்காலமாக அமெரிக்காவின் சில உயர் இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 2009 இல் மின் விநியோக முறைமையில் 15 சதவீத சேதாரம் ஏற்பட்டுள்ளது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க



மின் விநியோக முறைமையில் 2009 ஆம் ஆண்டு சுமார் 15 சதவீதம் சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப மற்ற வகையிலேயே இந்த சேதாரங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றை தனித்தனியாக வீதத்தில் அளவீடு செய்ய முடியாது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது மின்சக்தி அமைச்சரிடம் கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஆளும் கட்சி எம்.பி. யான ஏ.எச்.எம். அஸ்வர் மின்சார விநியோக முறைமையில் ஏற்பட்ட சேதாரங்கள் மற்றும் இவற்றை குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான கேள்விகளை கேட்டிருந்தார்.

கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க 2009 ஆம் ஆண்டு மின்சார முறைமையில் சுமார் 15 சதவீதம் சேதாரம் ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத சேதாரங்களை மிகச் சரியாக பிரித்தறிந்து அளவீடு செய்ய முடியாது. 2008 ஆம் ஆண்டில் 14.99 சதவீதமாக இருந்த சேதாரம் 2009 ஆம் ஆண்டில் 14.59 சதவீதத்தைச் சுட்டிக் காட்டியிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 0.4 வீத வீழ்ச்சியாகும்.

மின்விநியோக முறைமையில் ஏற்படுகின்ற சேதாரங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் அனைத்து மின் விநியோக முறைகளும் நான்கு வலயங்களாக பிரிக்கப்படுவதுடன் உயரமுத்தம் கொண்ட மின் விநியோகத்திற்கு தன்னியக்கமாணி வாசிப்பு அறிமுகப்படுத்தப்படும் என்றார். (ஸ்ரீ-2)

# நாட்டின் ஆடைக் கைத்தொழில் பாரிய சரிவை எதிர்நோக்கி வருகின்றது

(கொழும்பு)

நாட்டின் ஆடைக்கைத்தொழிற்துறை பாரிய சரிவினை எதிர்நோக்கி வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

கடந்த ஆறு வருடங்களில் ஆடைக்கைத் தொழில் துறையைச் சார்ந்த ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டில் 842 ஆகக் காணப்பட்ட ஆடைக்கைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தற்போது 518 ஆக வீழ்ச்சிய டைந்துள்ளது.

எவ்வாறெனினும் ஆடைக்கைத்தொழில் துறையின் மூலம் ஈட்டப்படும் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு ஆடைக்கைத் தொழிற்துறையின் மூலம் 2 ஆயிரத்து 654 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டதாகவும் கடந்த ஆண்டில் இந்தத் தொகை 3ஆயிரத்து 053 ஆக உயர் வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூடப்பட்டுள்ளஆடைத் தொழிற்சாலைகளை மீளவும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# கடந்த ஐந்தாண்டுகளின் 1258 மாணவர்கள் சட்டக்கல்லூரிக்கு அனுமதி பெற்றுள்ளனர்

2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு ஆயிரத்து 258 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 95 மாணவர்கள் 35 வயதையும் மிஞ்சியவர்கள் என்று நீதியமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது அஜித் பி பெரேரா எம்.பி.கேட்டிருந்த கேள்விகளுக்கான பதிலை அமைச்சர் அவைக்கு சமர்ப்பித்தார்.

அந்தப் பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டக் கல்லூரிக்கு சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையின் ஊடாக 2006 ஆம் ஆண்டு 249 மாணவர்களும் 2007 ஆம் ஆண்டு 247 மாணவர்களும் 261 மாணவர்கள் 2008 ஆம் ஆண்டும் 241 மாணவர்கள் 2009 ஆம் ஆண்டும் இவ்வாண்டு 260 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 35 வயதை விஞ்சிய மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2006, 2007 ஆம் ஆண்டுகளில் தலா 18 மாணவர்களும் 2008 ஆம் ஆண்டு 27 மாணவர்களும் , 2009,2010 ஆம் ஆண்டுகளில் தலா 16 மாணவர்களும் என கடந்த ஐந்து ஆண்டுகளில் 95 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப்பட்டம் பெற்று கடந்த ஐந்து ஆண்டுகளில் 604 மாணவர்கள் சட்டக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் கடந்த ஐந்து ஆண்டுகளில் 35 வயதையும் விஞ்சிய மாணவர்கள் 281 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகள் 291 பேர் சட்டக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 13 மாணவர்கள் 35 வயதையும் விஞ்சியவர்கள் என்றும் அந்தப் பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நவம்பர் மாத இறுதியில் ஐ.சி.ஆர்.சி தனது மன்னார் பணியகத்தை மூடவுள்ளது

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் இறுதியில் தனது மன்னார் பணியகத்தை மூடிக்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

இறுதியில் இடம்பெற்ற ஆயுத மோதலானது முடிவடைந்து ஒரு வருடத்துக்கு மேலான காலம் பூர்த்தி அடைந்த நிலையில் தனது பணிகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளின் ஒரு முயற்சியாக, ஐ.சி.ஆர்.சி. தனது மன்னார் மாவட்டத்துக்கான பணியகத்தை எதிர்வரும் நவம்பர் மாதத்தின் இறுதியில் மூடிக்கொள்ளவுள்ளது.

இப்பகுதியில் மீள்குடியேறிய சமூகங்களுக்கான ஆதரவை ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் தனது வவுனியா பணியகமூடாக வழங்கவுள்ளதுடன் இப் பணியகத்தினூடாக மன்னாரை வதிவிடமாக கொண்ட குடும்பங்கள் தடுப்புக் காவலில் உள்ளவர்களை பார்வையிடச் செல்ல உதவும் வேலைத் திட்டத்தையும் வழங்கிக் கொள்ளும். இத் திட்டத்தின் மூலம் தடுப்புக் காவலில் உள்ள தமது உறவினரை பார்வையிடச் செல்ல உதவி கோரி நிற்கும் குடும்பங்களுக்கு ஐ.சி. ஆர்.சி.யினது பணக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

ஆயுத மோதலானது மக்களது வாழ்க்கையில் ஏற்படுத்திய நீடித்த தாக்கத்தையும் இயல்பு நிலைக்கு மீளச் செல்ல மற்றும் மீள் கட்டுமான முயற்சிகள் போன்றவற்றில் ஆரம்பக் கட்டத்தின் போது அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆதரவின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, ஐ.சி.ஆர்.சி தொடர்ந்தும் இப்பகுதிகளில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என ஐ.சி.ஆர்.சி. யின் இலங்கைக்கான தலைமைப் பேராளர் போல் கஸ்டெலா கூறினார்.


இதேவேளையில் ஐ.சி.ஆர்.சி.யானது தற்போதைய தேவைகளில் தான் வழங்கி வரும் உதவி நடவடிக்கைகளை தனக்கு உள்ள வளங்களுக்கேற்ப சீர்செய்யப்பட வேண்டியதை உணர்ந்துள்ள நிலையில் மன்னார்ப் பகுதிகளை வவுனியாவிலிருந்து இலகுவில் அணுகக் கூடியதாகவுமுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

ஆயுத மோதல்கள் முடிவுற்று அவைகள் ஏற்படுத்திய மனிதாபிமான பிரச்சினைகளுக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.சி.ஆர்.சி. உலகளாவிய அனுபவத்தைக் கொண்டுள்ளது.

இலங்கையில் 1989 ஆம் ஆண்டு முதல் நிரந்தர பிரசன்னமாகியிருக்கும் ஐ.சி. ஆர்.சி. மனிதாபிமான தேவைகளில் உதவிகளை வழங்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவைகளை புரிந்திட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்துவரும் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவையும் வழங்க முன்வருவதாகவும் மீண்டும் கூறிக்கொள்கிறது என்றுள்ளது. (ஸ்ரீ)

# பாகிஸ்தானில் 4 இடங்களில் அமெரிக்கா ஏவுகணை தாக்குதல்

## 24 பேர் பலி



(இஸ்லாபாத்)

பாகிஸ்தானில் உள்ள வடக்கு வர்கிஸ் தான் பகுதியில் அல்கொய்தா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் ஏராளமானோர் பதுங்கி உள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படைகள் இந்த இடத்தை குறி வைத்து அடிக்கடி ஏவுகணை தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 4 இடங்களில் அமெரிக்கா ஆள் இல்லாத விமானங்களை இயக்கி அதன் மூலம் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

முதல் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். அடுத்த 3 தாக்குதல்களில் 20 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்று அமெரிக்கா கூறியுள்ளது. ஆனால் இறந்தவர்களில் 4 குழந்தைகளும் உள்ளனர். எனவே பொதுமக்களும் இதில் பலியாகி இருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானில் 2008 ஆம் ஆண்டுக்குப் பின் அமெரிக்கா 122 தடவை ஆள் இல்லாத விமானம் மூலம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஆயிரத்து 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே பாகிஸ்தானில் உள்ள குராம் என்ற இடத்தில் வீதி ஓரத்தில் குண்டு வெடித்தது. அப்போது அந்த வழியாக சென்ற பயணிகள் வான் அதில் சிக்கி கொண்டது. இதில் 10 பேர் பலியானார்கள். (ஸ்ரீ-2)

# சோமாலிய விமான நிலையத்தில் தற்கொலைப்படை தாக்குதல்

## 9 பேர் பலியாகினர்

(மொகாதிஷு)

சோமாலியாவின் தலைநகர் மொகாதிஷு விமான நிலையத்தில் தற்கொலைப் படை தீவிரவாதி நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

விமான நிலையத்துக்குள் காரில் நுழைந்த தீவிரவாதி காரை மோதி வெடித்துச் சிதறினான். அதைத் தொடர்ந்து மற்றொரு காரில் வந்த தீவிரவாதிகள் பாதுகாப்பு படையினருடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

இராணுவ உடையில் இருந்த 2 தீவிரவாதிகள் பயணிகள் இருக்கும் இடத்துக்கு சென்றனர்.

அவர்களை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தியபோது இருவரும் அதே இடத்தில் வெடித்துச் சிதறினர். இந்தத் தாக்குதலில் 2 இராணுவ வீரர்கள் , 4 பொலிஸார் , 3 பயணிகள் உயிரிழந்தனர்.

தற்கொலைப் படை தீவிரவாதிகள் 5 பேரும் வெடித்துச் சிதறி இறந்தனர். (ஸ்ரீ-2)

# ரஷ்யாவில் தற்கொலை தாக்குதல்

## 17 பேர் பலி; 130 பேர் படுகாயம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் வடக்கு காகசஸ் மாகாணத்தில் விளாடிகல்காஷ் நகரம் உள்ளது. அங்குள்ள சந்தை சனநெருக்கடி மிகுந்த பகுதியாகும். நேற்று முன்தினம் இங்கு தற்கொலை தீவிர வாதிகள் சிலர் வெடிகுண்டுகள் நிரப்பிய காருடன் வந்த னர். சந்தையின் நுழைவு வாயிலில் வந்தபோது காரில் இருந்த குண்டுகளை வெடிக்க செய்தனர். இதனால் கார் வெடித்துச் சிதறியது. அங்கு கரும்புகையுடன் தீப்பிழம்பு ஏற்பட்டது.

அங்கிருந்த மக்கள் பதற்றத்துடன் அங்குமிங்கும் ஓடினர். இந்தத் தாக்குதலில் 17 பேர் அதே இடத்தில் பலியானார்கள் 130 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர்களில் பெரும்பாலானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பலியானோர் எண்ணிக்கை உயரும் அபாயம் ஏற்படும் எனவும் கூறப்படுகிறது.

இந்தத் தகவலை அவசர கால அமைச்சக அதிகாரி அலெக்ஸ்சான்டர் போபேர்லி தெரிவித்தார். தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்ட



சந்தைப்பகுதி முழுவதும் இரத்த வெள்ளமாகக் காணப்படுகிறது. அங்கு மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெறுகிறது.

இச்சம்பவத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மெத்வதேவ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மீட்பு நடவடிக்கையை முடுக்கிவிடுவதற்காக தனது தூதரை விளாடிகாவ்காஷ் நகருக்கு அனுப்பியுள்ளார். மேலும் தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டு பிடித்து தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்துள்ளார்.

இதற்கிடையே இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இங்கு இரட்டை தற்கொலை தாக்குதல் நடந்தது. இதில் 12 பேர் பலியாகினர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸ் அதிகாரிகள் ஆவர். (ஸ்ரீ-2)




# ஆஸியின் புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் 28 இல் கூடவுள்ளது

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவின் புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி கூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. கடந்த 70 ஆண்டுகளில் முதன்முறையாக அங்க சிறுபான்மை அரசு அமைந்துள்ளது. ஜூலியா கிலார்ட்டின் தலைமையிலான லேபர் கட்சி அங்கு வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியன் கிரீன்ஸ் எம்.பி மற்றும் மூன்று சுயேட்சை எம்.பி.க்களின் உதவியுடன் அக் கட்சி அங்கு ஆட்சியமைத்துள்ளது.

மொத்தமுள்ள 150 இடங்களில் லேபர் கட்சி 72 இடங்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து மேலும் 4 எம்பிக்களின் ஆதரவுடன் அந்தக் கட்சி ஆட்சி பீடத்தில் ஏறியுள்ளது.

இதைத் தொடர்ந்து புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் 28 ஆம் திகதி கூடுகிறது என தி அவுஸ்திரேலியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து பிரதமர் ஜூலியா கிலார்ட் நேற்று முன்தினம் கூறுகையில்,

அதற்கு முன்னதாக லேபர் கட்சியின் செயற்குழு கூடி கடந்த மாதம் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் குறித்து கலந்தாலோசனை நடத்தப்படும், தேர்தலில் லேபர் கட்சி பல இடங்களில் தோல்வியுற்றதற்கான காரணங்கள் ஆராயப்படும்.

கடந்த காலங்களை மறந்துவிட்டு கட்சியை எதிர்காலத்தில் பலமிக்கதாக மாற்றுவதற்கு தேவையான வழிகளை கட்சி நிர்வாகிகள், தலைவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். இதற்காக கட்சித் தொண்டர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

லேபர் கட்சி தான் மக்களை எதிர்காலத்தில் வழிநடத்திச் செல்லும் வழிகாட்டியாக இருக்கும் என்று அவர் கூறினார்.

பின்னர் கூட்டணிக் கட்சிகளின் முதல் கூட்டமும் நேற்று முன்தினம் நடைபெற்றது. (ஸ்ரீ-2)

# முக்கிய நாடுகளில் தனது ஒளிபரப்பு சேவையினை நிறுத்துகிறது பி.பி.சி

(லண்டன்)

உலகம் முழுவதும் மிகப்பெரிய ஒளிபரப்பும் சேவையினை கொண்டுள்ள மீடியா நிறுவனமான பி.பி.சி. தனது நிதிபற்றாக்குறையினால் ஆட்குறைப்பு செய்வதுடன் சில முக்கிய நாடுகளில் ஒளிபரப்பு சேவையினை நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளது.

பி.பி.சி. ஒளிபரப்பு நிறுவனம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் 25 சதவீதம் ஆட்குறைப்பு செய்யவுள்ளதாக கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நிதிப்பற்றாக்குறையினால் தள்ளாடி வந்த நிலையிலும் இந்நிறுவனம் வெளிநாடுகளில் தனது ஒளிபரப்பு அலுவலகங்களை நிறுவியுள்ளது. போதிய விளம்பர வருமானம் இல்லாத சில நாடுகளில் இதன் ஒளிபரப்பினை நிறுத்தி வைக்கவுள்ளது. அதன்படி பர்மா, ரஷ்யா ஆகிய நாடுகளில் தனது ஒளிபரப்பினை நிறுத்தவுள்ளது. மேலும் பிற நாடுகளில் உள்ள அலுவலக நிர்வாகிகளை 272 மில்லியன் டொலர் அளவுக்கு நிதிதிரட்டுமாறும் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மெக்சிகோவில் மேயர் சுட்டுக்கொலை

(மெக்சிகோ)

மெக்சிகோவில் உள்ள ஷான் லூயிஸ் போடோஸி நகர மேயர் எல் நரஞ்ஜோ கடந்த 8 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரை முகமூடி அணிந்து வந்தவர்கள் சுட்டுக் கொன்றனர். இது தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஷான் லூயிஸ் போடோஸி நகர அரசு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். மேயர் படுகொலை செய்யப்பட்டதற்கு அந்நாட்டு ஜனாதிபதி பிலிப் கால்டெரோன்ஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த மாதத்தில் மட்டும் நரஞ்ஜோ வோடு சேர்த்து 3 மேஜர்கள் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் மெக்சிகோ அரசையே குறிவைத்து செயற்பட்டு வருவதாக மேயர் நரஞ்யோ மற்றும் சமீபத்தில் கொல்லப்பட்ட மற்றொரு மேயர் அலெக்சாண்டர் லோபஸ் கிரஸியா ஆகியோர் தெரிவித்திருந்தனர். இந்தப் படுகொலைகளுக்கான காரணம் குறித்து உடனடியாக தெரியவில்லை. (ஸ்ரீ-2)

# சீனா-ஜப்பான் நாட்டு படகுகள் நடுக்கடலில் மோதல்

## இருநாடுகளிடையே பதற்றம்

(டோக்கியோ)

சீனா, ஜப்பான் நாடுகளிடையே சர்ச்சைக்குரிய தீவு ஒன்று உள்ளது. இந்தத் தீவு அருகே ஜப்பானிய ரோந்து படகுகளும் சீனாவின் மீன்பிடி படகும் மோதிக் கொண்டன. இதைத் தொடர்ந்து அந்த மீன்பிடி படகை ஜப்பான் கைப்பற்றியது. இதன் காரணமாக இரு நாடுகளிடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையை சரியாக கையாளாவிட்டால் இருதரப்பு உறவு பாதிக்கும் என்று சீனா எச்சரித்து உள்ளது. இது தொடர்பாக சீன வெளிநாட்டு அமைச்சரக செய்தி தொடர்பாளர் ஜியாங் யூ கூறுகையில்,

சர்ச்சைக்குரிய நிலப்பகுதியில் தகராறைச் சரியாக கையாளாவிட்டால் அது இருதரப்பு உறவையும் மிக மோசமாகப் பாதிக்கும். டையாவோயூ தீவுகள் சீனாவுக்கு சொந்தமானவை. எனவே சீனப் படகுகள் மீது ஜப்பானிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை ஏற்க முடியாது என சீன அதிகாரி கூறினார்.

சீனக் கடலில் உள்ள டையாவோயூ என்று சீனாவிலும் சென்காகு என்று ஜப்பானிலும் அழைக்கப்படும் தீவுகளுக்கு சீனா, ஜப்பான், தைவான் ஆகிய 3 நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. (ஸ்ரீ-2)



சிலியின் கோபியாபோவில் சுரங்கம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதை தொடர்ந்து மீட்புப் பணிகளுக்காக பெரிய துளையிடும் கருவி பயன்படுத்தப்படுகிறது.

# 78 ஆண்டுகளாக தண்ணீர் குடிக்காமல் வாழ்ந்துவரும் பெங்களூர் மூதாட்டி

(பெங்களூர்)

பெங்களூரைச்சோந்த 92 வயதுடைய மூதாட்டி ஒருவர் 78 ஆண்டுகளாக தண்ணீர் குடிக்காமல் உயிர் வாழ்கிறார். தினமும் இரண்டு கப் கோப்பி மட்டும் குடிக்கிறார்.

மனிதனின் உடம்பிற்கு தண்ணீர் தேவையா ? இல்லையா? என்ற சர்ச்சை ஒவ்வொரு முறையும் எழுந்து மறைகிறது. பெங்களூரைச்சேர்ந்த நரசம்மா என்ற 92 வயது பாட்டி மீண்டும் இந்தச் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளார். இவருக்கு 14 வயதில் மயக்கம் போன்று ஏற்பட்டு, தொண்டை வறண்டுள்ளது. அப்போது ஒரு நாளைக்கு சுமார் 10 லீற்றர் தண்ணீர் குடித்துள்ளார். இதில் அவரது உடம்பு பருமன் அடைந்து கால்கள் வீங்கி விட்டதாகவும் இதனால் நடக்க முடியாமல் அவதிப்பட்டுள்ளார்.

இவரது நிலைமையப் பார்த்து பெற்றோர் பயந்தனர். ஆயுர்வேத டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். அங்கு இவருக்கு உடம்பில் அதிகப்படியான தண்ணீர் இருப்பதாகவும், " ஸ்டீம் தெரபி" (நீராவி சிகிச்சை) மூலம் 48 நாட்களுக்கு சிகிச்சை அளித்து தண்ணீர் வெளியேற்ற வேண்டும் என்று தெரிவித்தனர். சிகிச்சையும் அளிக்கப்பட்டது. பலனும் கிடைத்தது. இதற்குப் பின்னர் தண்ணீர் குடிப்பதில்லை என்ற சபதம் எடுத்து, குடிப்பதை நிறுத்தி விட்டாராம்.

கடந்த 2000 ஆம் ஆண்டில் வட இந்தியா மற்றும் தென்னிந்தியாவில் 36 நாட்கள் சுற்றுலாப்பயணம் மேற்கொண்ட இவர் சாப்பிடவும் இல்லை, தண்ணீரும் அருந்தவும் இல்லை. இவரது சுற்றுப் பயணத்தில் மொத்தமே 3கப் கோப்பி மட்டுமே குடித்தாராம். " தண்ணீர் குடிக்காமல் எப்படி உயிர் வாழ்கிறீர்கள்" என்று இவரைக் கேட்டால், நான் ஆயுர்வேத மருந்துகளை மட்டும் சாப்பிடுகிறேன். இதற்கு ஆங்கில மாத்திரை களைப் போல தண்ணீர் தேவையில்லை. கோடைகாலங்களில் வெப்பத்தில் இருந்து உடம்பை பாதுகாக்கவும் உடம்பில் தண்ணீரின் அளவை சரிப்படுத்தவும் ஈரத் துணிகளை உடுத்துவேன். அரிசிசாதம், உலர்ந்த பழங்கள் தான் சாப்பிடுவேன். தினமும் 5மணிநேரம் பிரார்த்தனையில் ஈடுபடுவேன். ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு உபவாசம் இருப்பேன் என்றார்.

மனித உடம்பிற்கு தண்ணீர் மிகவும் இன்றியமையாதது. அபூர்வமாக நமது உடல் உறுப்புகள் தண்ணீர் தேவையை பல்வேறு வழிகளில் உடம்பில் இருந்து எடுத்துக் கொள்கிறது. இந்த மூதாட்டியின் கூற்றை நிரூபிக்க, அவரது உடம்பை முழுவதும் சோதனை செய்யவேண்டும் என்று வைத்தியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## மாவோயிஸ்டுகளுடனான மோதல் பொலிஸ் அதிகாரியொருவர் பலி

(தும்கா)

ஜார்க்கண்டின் தும்கா மாவட்டத்தில் மாவோயிஸ்டுகளுடன் நிகழ்ந்த கடும் துப்பாக்கிச் சண்டையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். இரு பொலிஸார் காயமடைந்தனர்.


ஜாமா வனப் பகுதிகளில் நேற்று அதிகாலை நிகழ்ந்த இந்த துப்பாக் கிச் சண்டையில் தலையில் குண்டு பாய்ந்த ஜாமா பொலிஸ் நிலைய அதிகாரி சதானந்த் சிங் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக துணை பொலிஸ் ஜிஜி பி.கே.பாண்டே தெரிவித்தார்.

சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ரவிசங்கர் உள்ளிட்ட இருவர் இந்தத் துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்தனர். இதையடுத்து ராஞ்சியில் இருந்து உயர் பொலிஸ் அதிகாரிகள் தும்காவுக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். (ஸ்ரீ-2)




# 32 ஆண்டுகளுக்கு பின்னர் யமுனை நதியில் வெள்ளம்

## மக்கள் வெளியேற்றம்



32 ஆண்டுகளுக்குப் பின்னர் யமுனை நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இதனால் அரியானா டில்லி பகுதி மக்கள் பாதுகாப்பான இடம் நோக்கி வெளியேறியுள்ளனர்.

டில்லியையொட்டிய அரியானா மாநில பகுதிகளில் நல்ல மழை பெய்ததால் அங்குள்ள அணைகள் அனைத்தும் நிரம்பி விட்டன. வினாடிக்கு 8 இலட்சம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. 10 க்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் வயல் வெளிகள் தண்ணீரில் மூழ்கி விட்டன.

இதனால் திறந்து விடப்பட்ட தண்ணீர் யமுனை நதியில் பெருக்குடன் ஓடுகிறது. 205.6 மீற்றர் அளவு வெள்ளம் ஓடுகிறது. இது அபாய எல்லையைத் தாண்டி விட்டது. நேற்று மாலை இன்னும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதனால் கரையோர மக்கள் மாற்று இடங்களுக்குச் செல்லுமாறு அறிவு றுத்தப் பட்டுள்ளனர். வெள்ள நிலைமை குறித்து முதல்வர் ஷீலா தீட்ஷித் ஆலோசனை நடத்தினார். மக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளன என்றும் யமுனா பஜார், சாஸ்திரி பார்க், காத்லா ஹவுஸ், கார்கிமந்த், நிகமபோட் சாட் மதன்பூர் கார் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு சேதப்படுத்தக் கூடும் என அஞ்சப் படுகிறது. (ஸ்ரீ-2)



யமுனை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கரையோர வீடுகள் நீரில் மூழ்கி விட எஞ்சியதை எடுத்துக்கொண்டு வெளியேறும் சிறுவர்கள்.

# மெல்பேர்ன் வாழ் தமிழர்களை சந்திக்கும் தமிழருவி மணியன்



தமிழ் மொழிப் பற்றாளரும் தமிழ் தேசிய செயற் பாட்டாளரு மான தமிழருவி மணியன் அவுஸ்திரேலிய மெல்பேர்ன் வாழ் தமிழர்களுடன் நாளை ஞாயிற்றுக் கிழமை சந்திப்பொன்றை மேற் கொள்ளவுள்ளார்.

விக்ரோரிய மாநிலத்திலுள்ள தமிழ் அமைப்புக்களின் ஆதரவுடன் விக்ரோரிய ஈழத்தமிழ்ச் சங்கத்தால் இந் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் காங்கிரஸ் கட்சியில் முதன்மை செயற்பாட்டாளராக விளங்கிய தமிழருவி மணியன் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற கொடுமைகளை கண்டும் இந்திய தமிழக அரசியல் கட்சிகள் மேற்கொண்ட பிழைப்பு வாத அரசியலைக் கண்டும் வெகுண்டு தனது பதவியையும் துறந்து தமிழ் மக்களுக்கு ஆதரவாக பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தந்துள்ள இவர் சிட்னியில் தனது கருத்துக்களை பகிர்ந்துகொண்டு அடுத்ததாக மெல்பேர்னுக்கும் அதனைத் தொடர்ந்து அடிலெயிட், பிறிஸ்பேனுக்கும் செல்கின்றார்.

விக்ரோரிய மாநிலத்திலுள்ள தமிழ் அமைப்புக்களின் ஆதரவுடன் விக்ரோரிய ஈழத்தமிழ் சங்கத்தால் நாளை ஞாயிற்றுக் கிழமை மதியம் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை ஸ்கோர்ஸ்பியில் அமைந்துள்ள சென்யுட்ஸ் மண்டபத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# தெலுங்கானா தனிமாநிலம் அமைக்காவிட்டால் ஆந்திரா மீண்டும் கலவர பூமியாக மாறும்

## சந்திரசேகரராவ் எச்சரிக்கை



தெலுங்கானா தனி மாநிலம் அமைக்காவிட்டால் ஆந்திரா மீண்டும் கலவர பூமியாக மாறும் என்று சந்திரசேகரராவ் எச்சரித்துள்ளார்.

இது குறித்து தெலுங்கானா ராஷ்டிரிய சமிதிக் கட்சித் தலைவரும் முன்னாள் மத்திய மந்திரியுமான சந்திரசேகரராவ் விகாரபாத்தில் நிருபர்களிடம் கூறுகையில்,

ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்பது எங்களது நீண்ட நாள் கோரிக்கை. இதற்காக நாங்கள் அனைத்து விதமான போராட்டத்தையும் நடத்தி விட்டோம். ஆனால் மத்திய அரசு இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. குழு ஒன்றை அமைத்து தனி மாநிலம் அமைப்பதை இழுத்தடித்து வருகிறது.

டிசம்பர் மாதத்திற்குள் தனி மாநிலம் அமைக்காவிட்டால் ஆந்திராவில் மிகப் பெரிய போராட்டத்தை நடத்துவோம். அப்ளபோது ஆந்திரா கலவர பூமியாக மாறும் என்று எச்சரித்துக் கொள்கிறேன்.

தெலுங்கானா மாநிலம் அமைந்தால் அதில் புதிதாக 3 மாவட்டங்கள் சேர்க்கப்படும் என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

மனதில் இறைவன் உறைகின்றான்;
அவன்தான் மனச்சான்று.
– மினான்டர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சட்டத்தை அமுல்படுத்தி பொறுப்புணர்வை உணர்த்துங்கள்

நாட்டில் ஏற்படக்கூடிய பொறுப்பற்ற செயல்களை கட்டுப்படுத்த வேண்டுமாயின் சட்டம் இறுக் கமான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் எதனையும் நேர்த்தியாக – ஒழுங்காக செய்யமுடியாமல் போகும்.

இந்நிலைமையே யாழ்.குடாநாட்டில் காணப்படுகின்றது. குப்பை கூழங்கள், இறந்த வளர்ப்புப் பிராணிகள், குலை வெட்டிய வாழைகள், வீட்டுக் கழிவுகள் என அனைத்தையும் வீதியில் – அடுத்தவன் வீட்டுக்குமுன் கொட்டும் கொடூரம் மன்னிக்கப்படக் கூடியதல்ல.

தத்தம் வீட்டுக் கழிவுகளை ஒழுங்கான முறையில் அப்புறப்படுத்தும் பொறுப்புணர்வு தானாக ஏற்படவேண்டும்.

இதற்கான மனநிலையும் பக்குவமும் பொறுப்பும் இல்லையாயின் அதனைச் சட்டமாவது ஏற்படுத்த வேண்டும்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மிகத் தீவிரமாக மேற்கொள்ளும் அதேநேரம் வீதியில் குப்பை கூழங்களையும் வீட்டுக் கழிவுகளையும் கொட்டும் செயலை தடுத்து நிறுத்தாவிடின் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும் அரசியல் விளையாட்டில் ஒன்றாகிவிடும்.

எனவே யாழ்.குடாநாட்டில் இயங்கும் அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளும் சட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்த முன்வர வேண்டும்.

வீதிகளில் குப்பைகளை கொட்டுவோரை உடனடியாக கைதுசெய்து அவர்களை நீதிமன்றில் நிறுத்தி உரிய தண்டனை வழங்குவது உள்ளூராட்சி சபைகள் மற்றும் சுகாதாரப் பகுதியினரின் கட்டாய கடமையாகும்.

அதேநேரம் பொது இடங்களில் சுத்தத்தைப் பேணு வதிலும் இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

இவையாவற்றிற்கும் மேலாக வீதிகளில் மற்றும் பொது இடங்களில் குப்பை கூழங்களை கொட்டுவோரை கைதுசெய்யவும், அவர்களுக்கு தண்டனை வழங்குவதற் குமாக விசேட பொலிஸ் குழுவை பிரதேச ரீதியாக நியமித்து அவர்களுக்கு உடனுக்குடன் தகவல் வழங்கக் கூடிய தொலைபேசி இணைப்பை உருவாக்கி அதுபற்றி பொதுமக்களுக்கு அறியத்தரவேண்டும்.

அதேசமயம் பொலிஸ் – பொதுமக்கள் சார்ந்த உறவை ஊருக்கு ஊர், கிராமத்துக்குக் கிராமம் வலுப்படுத்தவும் அங்குள்ள பிரச்சினைகளை இனங்காணவும் கூடியதான திட்டங்களும் நடைமுறைக்குக் கொண்டுவருவது,

யாழ்.குடாநாட்டுப் பொலிசார் தென்பகுதியிலிருந்து இங்குவரும் சிங்கள மக்களின் நலனுக்காக மட்டுமே செயற்படுகின்றனர் என்ற அபச்சொல்லை தமிழ் மக்களின் மனத்திலிருந்து விலக்குவதற்கு உதவுவதாக அமையும்.

எதுவாயினும் வீட்டுக் கழிவுகள் – வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களில் சேர்கின்ற கழிவுகளை சீராக அகற்றுவதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி மன்றங்கள் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி முறையாக நடைமுறைப்படுத்துவதில் வெற்றிகாணவேண்டும்.

இல்லையேல் சட்ட நடவடிக்கைகள் கூட நியாயமற்றவை என்ற பொது விமர்சனத்தை தவிர்க்க முடியாமல் போய்விடும்.

# கிளிநொச்சி சாந்தபுரம் கிராம மக்கள் தங்கள் காணிகளுக்கு செல்ல அனுமதி

(கிளிநொச்சி)

சாந்தபுரம் கிராம மக்கள் தங்கள் காணிகளுக்குச் செல்ல நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட படைத்தரப்பினர் இந்த அனுமதியை மக்களுக்கு நேற்றுக் காலை வழங்கியிருக்கிறார்கள். கடந்த பல மாதங்களாக தங்கள் காணிகளுக்கு செல்ல வேண்டுமென உறுதிபடக் கோரிக்கை விடுத்துப் போராடி வந்தமை குறிப்பிடத்தக்கது.

சாந்தபுரம் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுவை அண்டிய கிராமம். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த எண்ணூறுக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் காணிகளுக்குள் செல்லவிடாமல் தடுக்கப்பட்டிருந்தார்கள்.

இந்த மக்களில் 281 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் முன்னர் சில மாதங்களாகதடுத்து வைக்கப்பட்டிருந்தனர். குறித்த மக்களது கடுமையான போராட்டத்தைத் தொடர்ந்து அந்த மக்கள் சாந்தபுரம் கிராமத்திலுள்ள பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்கள். மிகுதி மக்கள் தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களை விடுவித்து மீள் குடியேற்றவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் பல தடவைகள் தமது கோரிக்கைகளை முன்வைத்து தமது காணிகளுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் காணிகளுக்குள் தாங்கள் ஊடறுத்துச் செல்ல நேரிடும் எனவும் தெரிவித்தனர். காணிகளுக்கு மேலும் இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட மக்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சாந்தபுரம் பாடசாலையில் தங்கியிருந்த மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்தார்கள். பாடசாலையிலும் பாடசாலை வளாகத்திலும் கூடாரம் அமைத்தும் தடுப்பு முகாம் ஒன்றைப் போல் திறந்த வெளியிலிருந்து மக்கள் கடும் துன்பங்களுக்கு முகம் கொடுத்தார்கள். அண்மைய மழையிலும் முன்னர் இருந்த வெயிலின் வெம்மையிலும் பாதிக்கப்பட்டு நோய்களுக்கு முகம் கொடுத்தார்கள்.

கடந்த பல மாதங்களாக சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் என்ற பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்ட இந்த மக்கள் தங்கள் காணிக்குள் அனுமதிக்க வேண்டும் என தொடர்ச்சியாக கோரிவந்தனர். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு வந்தபொழுது நேரடியாக மக்கள் கோரிக்கை மனுவை வழங்கியிருந்தார்கள். இந்த மக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அவ்வப்போது சந்தித்து ஆறுதல் கூறி வந்தார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மக்களது பிரச்சினை குறித்து தொடர்ச்சியாக கவனப்படுத்தி வந்தனர்.

எத்தகைய துன்பத்திலும் தங்கள் நிலத்திற்கு திரும்ப வேண்டும். திரும்பியே தீருவோம் என்ற உறுதியான கோரிக்கையுடன் இருந்த மக்கள் இன்று தங்கள் காணிகளுக்கு திரும்பியிருக்கிறார்கள். (ச–5)

# யாழ்ப்பாண வர்த்தகர்கள் அடக்கப்படுகின்றனர்

## வணிகர் கழகம் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக யாழ். வணிகர் கழகம் கவலை வெளியிட்டுள்ளது.

நேற்று மாலை யாழ்ப்பாண வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாநகர மேயர் திருமதி யோ. பற்குணராஜாவுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது வணிகர் கழகப்பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர். இச் சந்திப்பில் யாழ்.வணிகர்கழகப் பிரதிநிதிகள் கூறியது,

யாழ்ப்பாணத்திலுள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படுவதில்லை. வடிகால்களைத் துப்புரவு செய்ய வேண்டிய மாநகர சபை ஊழியர்கள் குப்பைகளை வடிகால்களுக்குள் அமிழ்த்தி விட்டு செல்கின்றனர்.

ஆனால் இச்செயற்பாட்டை வர்த்தகர்கள் செய்ததாகக் கூறி மாநகர சபையின் முறையீட்டின் பேரில் பொலிஸார் வர்த்தகர்களை கைது செய்கின்றனர். இது பலாத்காரமாக எதுவித முன்னறிவித்தலுமின்றி இடம்பெறுகிறது. 30 வருடங்களுக்கு முன் வெடி பொருட்கள் வைத்திருந்தால் கூட ஆணையின்றிக் கைது செய்யமுடியாது. ஆனால் இன்று நாம் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.

தென்பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் போடும் குப்பைகளுக்கும் வர்த்தகர்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது எவ்வாறு நியாமாகும் எம்மை மனித நேயத்துடன் நடத்த அனைவரும் முன்வர வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த மாநகரசபை முதல்வர்,

வர்த்தகர்கள் குப்பைகளை பொதி செய்து வைக்க வேண்டும் என பலமுறை கூறிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக நடைபெறும் இவ்வேளையில் வர்த்தகர்கள் அதற்கு உதவ வேண்டும்.

வடிகால்களை துப்புரவாக வைத்திருக்க வர்த்தகர்கள் கவனமெடுக்கவேண்டும். குப்பை போடுவோர் தொடர்பில் உடனடியாக முறையிட வேண்டும் என்றார்.

இக் கலந்துரையாடலில் இறுதியாக எடுக்கப்பட்ட முடிபு காலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணிவரை நகரசபை ஊழியர்கள் குப்பைகளை அகற்றுவார்கள் பின்பு 8.00 மணி முதல் 12.00 மணிவரை நகரசபை வாகனம் குப்பைகளை ஏற்றிச் செல்லும். பின்பு இரவு 8.00 மணிமுதல் 12.00 மணி வரை வாகனம் குப்பை அகற்றும் என நிரந்தரத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர மேயர், வணிகர்கழக தலைவர் ஆர்.ஜெயசேகரம், செயலாளர் ஜெனக்குமாரன் மற்றும் வர்த்தகர்கள், மாநகரசபை ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ச–5)

# சாரணர்கள், நிர்வாகிகள் கிளிநொச்சியில் ஒன்றுகூடல்

(கிளிநொச்சி)

வட மாகாண சாரணர், சாரணிய நிர்வாகிகள்அனைவரும் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு ஒன்று கூடுகின்றனர் என வடமாகாண ஆணையாளர் நா. போஜன் தெரிவித்தார்.

மாவட்ட சாரணர் ஆணையாளர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரணக்குழுத் தலைவர்கள், சாரணியத் தலைவிகள், இவ் ஒன்றுகூடலுக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை கிளிநொச்சி கல்விவலயத்தின் கீழ் உள்ள குருளைச் சாரணர், சாரணிய ஆரம்பப் பயிற்நி பெற்ற சகலரையும் பாடசாலை அதிபர்கள், சாரணர், குருளை சாரணிய அபிவிருத்திக் கருத்தரங்கிற்கு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட உதவி ஆணையாளர் (நிர்வாகம்) பொ. சிறீஸ்கந்தராசா வேண்டுகின்றார். (ச–3)

# ஆவணி சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் ஆவணி சதுர்த்தி உற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் இன்று காலை 7.30 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாலை 7 மணிக்கு வசந்த மண்டபபூசை ஆரம்பமாகி விநாயகப் பெரு மான் திருவீதியுலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது.

இவ் உற்சவத்தின் விசேட நிகழ்ச்சியாக காலை 11 மணிக்கு விநாயகர் வழிபாடு என்னும் விடயம் பற்றி கதா பிரசங்கமும் மாலை 5 மணிக்கு இணுவையூர் ரசிகப் பிரியா சபாவழங்கும் வாத்திய சங்கமமும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ–4)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு




“நான்” என்னும் அகந்தை உணர்வு சிறிதும் இல்லாமல் நாம் செய்யும் செயல்கள் சிறந்தனவாக அமைகின்றன. அதில்தான் நமக்கு உள்ள திறமை அபரிமிதமாகப் பயன்படுகிறது.

நான் உனது உடைமையே! நான் உனது உடைமையே!! என்று சொல்லிக் கொண்டே இரு. கடவுள் எங்கும் இருக்கிறார். அவரைத் தேடித்தேடித் அலைய வேண்டாம். இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டு பார்க்க முயல்.

ஓங்கி அடிப்பது எளிது, ஆனால் அடிக்காமல் அடங்கி இருப்பது மிகக் கடினமானது. “இறைவா! உம்மிடமே தஞ்சம் அடைகிறேன்” என்று கூறிவிட்டு, அவன் செயலை எதிர்பார்த்துக் காத்திருப்பது அதைவிட கடினமானது.

# ஒளிதந்த உயர் அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பி



அமரர் அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் நான்காவது நினைவு தினம் இன்றாகும். கண் பார்வையற்றவர்களின் கல்வி வரலாற்றில் மிகவும் காத்திரமான பணியாற்றிய பெருமைக்குரியவர் இந்த அன்னை.1972 ஆம் ஆண்டுக்குமுன் இலங்கையில் கண் பார்வையற்ற பிள்ளைகளுக்கு சாதாரண பாடசாலைகளில் கற்கின்ற வாய்ப்பு இருக்க வில்லை. 1972 இல் இலங்கை ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட பிற்பாடே இவர்களுக்கு இவ்வாய்ப்பு கிட்டியது. எனினும் யாழ்ப்பாணத்திலே இதனைச் செயற்படுத்துவதற்கு அப்போது யாரும் முன்வரவில்லை. சலுகைகள் ஏதுமற்ற இந்தக் கடினமான பணியைப் பொறுப்பேற் பதற்கு அப்போது யாருக்கும் துணிவோ விருப்பமோ இருக்க வில்லை.

இந்த நிலையில் தான் அன்னை அன்னலட்சுமி கருணை உள்ளத்தோடு இந்தக் கடினமான கல்விப் பணியை முன்னெடுக்க முன்வந்தார். மருத்துவர்களாலும் மற்றவர்களாலும் கைவிடப்பட்ட நிலையில் இருளில் தவித்துக் கொண்டிருந்த விழிப் புலனற்ற பிள்ளைகளுக்குக் கல்வி மூலமாய்,ஒளிகாட்டி காசினியில் மேன்மையுடன் வாழ வழிகாட்டினார்,இந்த அன்னை.

இவரின் அரும்பணியின் பெறுபேறாய் இருபதுக்கும் மேற்பட்ட பார்வையற்றவர்கள் பட்டதாரிகளாயினர். இன்னும் பலர் பல்வேறு நிலைகளில் கல்வி கற்றுப் பயன்பெற்றனர்.

அன்னையின் முயற்சியால் 1988இல் வாழ்வகம் உதயமாயிற்று.தகுந்த பராமரிப்போ வழிகாட்டலோ இன்றித் தமது வீடுகளிலே தங்கியிருந்த பல பார்வையற்ற பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான ஒரு சூழலிலிருந்து கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு இதன்மூலம் ஏற்பட்டது.

2006 ஆம் ஆண்டு தான் அமரத்துவமடையும் வரை வாழ்வகத்தின் வளர்ச்சிக்காகவும் விழிப்புலனற்ற பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காகவும் தன் உடல் , பொருள்,ஆவி அனைத்தையும் அர்ப் பணித்துப் பாடுபட்டார்.

பெயர், புகழ் எதை யுமே விரும்பாமல் மறைவாய் இருந்து நிறைவான பணியாற்றிய இவ்வன்னை இன்று எம்மோடு இல்லை.ஆனாலும் அவரின் சிறப்பான பணி வாழ்வுக்குச் சாட்சிகளாய் பல பார்வையற்றவர்கள் இன்று பாங்குற வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சமூகத்தின் மிகவும் நலிவுற்ற ஒரு பகுதியினரான விழிப்புலனற்ற பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட இவ்வன்னையின் மனுக்குல சேவை மகத்துவம் மிக்கது; மாண்பு மிக்கது.யாரும் செய்யாத, யாராலும் செய்ய முடியாமல் அரும் சேவையை ஆற்றிய இவ்வன்னை நிச்சயமாய் அன்னை தெரேசா போன்ற அற்புதப் பெண்மணிகளின் வரிசையில் வைத்து மதிக்கப்படவேண்டியவர்.

**ஏ.ரவீந்திரன்**
B.A.Dip.in.Ed,M.E
தலைவர், வாழ்வகம்.

இந்த நல்ல நாளிலே நாமும் இவ்வன்னை பற்றியும் அவரின் அரும்பணிகள் பற்றியும் சற்றேனும் சிந்திப்போமாக.

# பொன்சேகாவிற்கு நடந்ததே உங்களுக்கு நடக்கும்

## ஊடகங்களை மிரட்டும் மேர்வின்

சில ஊடகங்கள் என்னை விமர்சிப்பதையே தொழிலாக கொண்டுள்ளது. ஊடகவியலாளர்கள் மக்களுக்கு நல்ல செய்திகளை கொண்டு செல்ல வேண்டிய புனிதப் பணிக்கு மாறான செயற்பாடுக ளைச் செய்கின்றனர். இவ்வாறானவர் களுக்கு சரத்பொன்சேகாவிற்கு நடந்துள்ள விடயமே நடக்கும் என்பதை நான் மிக துணிவுடன் சொல்கிறேன் என மிரட்டல் விடுத்துள்ளார்.

சமுர்த்தி ஊழியர் ஒருவரை மேர்வின் சில்வா மரத்தில் கட்டி தண்டித்தமையை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டி யதை அடுத்து அவரது பிரதிமைச்சுப் பதவி பறிபோனது.

நேற்று முன்தினம் 18 ஆம் திருத்தச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேறிய பின்னர் அவரது பிரதியமைச்சர் பதவி மீண்டும் அளிக்கப்பட்டது.பிரதியமைச்சுப் பதவி மீண்டும் கிடைத்ததை அடுத்து களனி பிரதேசத்தில் தனது ஆதரவாளர்களுடன் பால்சோறு பகிர்ந்துண்டு மகிழ்ந்தார் மேர்வின் சில்வா.

பின்னர் ஊடகவியலாளர்களுடன் பேசிய அவர் சில ஊடகங்கள் என்னை விமர்சிப்பதையே தொழிலாக கொண் டுள்ளது. பத்திரிகை ஒன்று என்னுடைய செய்திகளாலேயே விற்பனையாகின்றது. ஊடகவியலாளர்கள் மக்களுக்கு நல்ல செய்திகளை கொண்டு செல்ல வேண்டிய புனிதப் பணிக்கு மாறான செயற்பாடுகளை செய்கின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு சரத்பொன்சேகாவிற்கு நடந்துள்ள விடயமே நடக்கும் என்பதை நான் மிகத் துணிவுடன் சொல்கிறேன் என மிரட்டல் விடுத்துள்ளார்.

மேலும் ஊடகவியலாளர்கள் தமது பேனாவை தூக்கு மேடைக்கு செல்வதற்கும் மற்றோரை புண்படுத்தவும் பயன்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் நேற்று முன்தினம் பாராளுமன்றில் பேசிய சரத்பொன்சேகா தான் சிறைக்குச் செல்லலாம் ஆனால் ஏதோ ஒரு வடிவில் ஆட்சியைக் கைப்பற்றுவோம் எனத் தெரிவித்தார்.இது எதைக் குறிப்பிடுகின்றது. மக்களை கொன்ற, வங்கிகளை கொள்ளையடித்த, இளைஞர்களைச் சுட்டுக் கொன்ற ஜே.வி.பி.யின் கருத்தினைப் பிரதிபலிக்கின்றது.

நான் ஒன்றை சரத்பொன்சேகாவிற்கு சொல்கிறேன். எனது ஜனாதிபதி இந்த மிரட்டல்களுக்கு பயப்படமாட்டார் என்பதை பொன்சேகா மனதில் கொள்ளவேண்டும் என்று மேர்வின் சில்வா தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# களுத்துறை வீதி விபத்தில் — இருவர் உயிரிழப்பு —

களுத்துறை வடக்கு வஸ்கடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் முச்சக்கரவண்டி ஒன்று மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் 11 வயதுச் சிறுவனொருவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகவும் 41 வயதான பெண்ணொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் மேலும் இருவர் காயமடைந்து நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தோர் கடுவெலப் பகுதியைச் சேர்ந்தவர்களென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

முச்சக்கரவண்டியில் ஏற்பட்டிருந்த இயந்திரக் கோளாறே இவ்விபத்துக்குக் காரணமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)


# வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலை மீள இயக்குமாறு கோரிக்கை

வட்டக்கச்சியில் அமைந்துள்ள அரசினர் மத்திய வைத்தியசாலை மீள இயங்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அப்பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் தமது மருத்துவ தேவையை பெறுவதற்கு சுமார் 8 கி.மீ தொடக்கம் 12 கி.மீ. தூரம் பயணம் செய்து கிளிநொச்சி நகரிலுள்ள மாவட்ட பொது மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வகையில், வட்டக்கச்சி சிவிக் சென்ரர் வீதியில் அமைந்துள்ள மேற்படி அரச மருந்தகத்தை மீளவும் இயக்குவதற்கு அரச அதிகாரிகள் முயற்சி எடுக்க வேண்டுமென்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸ்ரீ-7-22)



சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களான திருமதி ஜெ.சுரேஷ், திருமதி ரே.குமரதாசன், திருமதி து.சிவகுமாரன் ஆகியோர் அதிபர் சகிதம் அழைத்து வரப்படுவதையும் மாணவி ஒருவர் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட மாணவர்கள், பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சுன்னாகம் செய்தியாளர்)




இராணுவத்தினரும் யாழ்ப்பாணக் கிரிக்கெட் சபையும் இணைந்து நடத்திய இருபது-20 கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான சனத் ஜெயசூரிய அழைத்து வரப்படுவதையும் இரண்டாம் இடம் பெற்ற ஜொனியன்ஸ் அணி வீரர்கள் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# சூதாட்ட முகவருடன் காணப்பட்டவர் டில்சான்

## பிரித்தானிய பத்திரிகை பகிரங்கம்

இங்கிலாந்தில் நடைபெற்ற இருபது - 20 உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போது சூதாட்ட முகவர்களை சந்தித்த இலங்கை வீரர் திலகரட்ண டில்சான் என பிரிட்டனின் டெய்லி மெயில் பத்திரிகை தெரிவித்துள்ளது. இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர் ஒருவரை ஐ.சி.சி.ஊழல் எதிர்ப்பு பிரிவினர் கண்காணித்து வருவதாக அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் எதிர்ப்பு பிரிவுக்கு இலங்கை கிரிக்கெட் சபையினால் அனுப்பப்பட்ட அறிக்கையொன்றில் டில்சானின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததாக டெய்லி மெயில் பத்திரிகை தெரிவித்துள்ளது.



லண்டன் இரவு விடுதியொன்றல் சட்டவிரோத சூதாட்ட முகவர் ஒருவருடன் டில்ஷான் காண்பபட்டார் என்ற சக வீரர்களின் சந்தேகம் குறித்து இலங்கை அணித் தலைவர் குமார் சங்ககார இலங்கை அணி நிர்வாகத்திற்கு அறிவித்தபின் அணி நிர்வாகத்தினால் இந்த இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

என்னும் டில்சான் தவறு எதனையும் செய்யவில்லை என டில்சானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எந்தவொரு இலங்கை வீரருக்கு எதிராகவும் ஆதாரங்கள் எதுவுமில்லை. அவர்கள் எவரும் குற்றவாளிகள் அல்லர். உலகக் கிண்ணப் பேட்டிகளுக்கான இலங்கை அணியின் திட்டங்களை குழப்பும் நோக்குடன் மனச்சாட்சியற்ற சிலரின் குற்றச்சாட்டுக்களே இவை என இலங்கைக் கிரிக்கெட் அணியின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

# யு.எஸ். ஓபன் அரையிறுதியில் நடால்




(நியூயோர்க்)

யு.எஸ் ஓபன் டென்னிஸ் அரையிறுதிக்கு உலகின் நம்பர்-1 வீரர் ரபெல் நடால் முன்னேறினார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கிராண்ட்ஸ்லாம் தொடரில் ஒன்றான யூ.எஸ். ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் ஸ்பெயினின் நடால் சகவீரர் பெர்னாண்டோ வெர்டாஸ்கோவை எதிர் கொண்டார்.

இதன் முதல் செட்டை 7-5 என நடால் கைப்பற்றினார். தொடர்ந்து அபாரமாக ஆடிய நடால் இரண்டாவது செட்டை 6-3 என எளிதாக வென்றார். பின் மூன்றாவது செட்டிலும் அனுபவ ஆட்டத்தில் அசத்திய நடால் 6-4 என தன்வசப்படுத்தினார். இறுதியில் 7-5, 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற நடால் அரையிறிதிக்கு முன்னேறினார்.

### கடின வெற்றி

மற்றெரு காலிறுதியில் ரஷ்யாவின் மைக்கெல் யூஸ்னி சுவிஸ்சர்லாந்தின் வாவ்ரின்காவை சந்தித்தார். இதன் முதல் நான்கு செட்களை இருவீரர்களும் மாறி மாறி கைப்பற்றினர். கடினமான போராட்டத்தின் முடிவில் 3-6, 7-6, 3-6, 6-3, 6-3 என்ற கணக்கில் யூஸ்னி வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார். இதில் இவர் நடாலை எதிர்த்து விளையாடுகிறார்.

பெண்கள் இரட்டையர் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வானியா கிங் கஜகஸ்தானின் ஷிவடோவா ஜோடி சிம்பாவேயின் காறாபிளாக் அவுஸ்திரேலியாவின் அனஸ்தாசியா ஜோடியை சந்தித்து இதில் 6-3, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற வானியா கிங் ஜோடி இறுதிப்போட்டிக்கு முன்னேறி அசத்தியது.

# ஐ.தே.கட்சியின்...

தமது கட்சியின் பிரச்சினைகள் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு சென்றுள்ளதாகவும் எதிர்வரும் வாரத்தில் இதற்கான தீர்வு காணப்படாவிட்டால் இக்குழுவினர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

கட்சித் தலைமைத்துவப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனக் கோரும் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மற்றும் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் கட்சியின் எதிர்காலம் குறித்து இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும். கட்சித் தலைமைத்துவம் உட்பட்டதான கட்சி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும் முகமாக அவசர கூட்டமொன்றை நடத்துமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைப்பு விடுத்தனர்.

அன்றைய தினம் மாலையே மேற்படி கூட்டத்தையும் நடத்த வேண்டும் என ஐ.தே.க எம்.பிக்கள் கோரினர். எனினும் அதை நிராகரித்த ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இக் கூட்டம் நடைபெறும் என அறிவித்தார்.

கட்சியின் சிரேஷ்ட தலைவர் பதவியொன்றை உருவாக்கி ரணில் விக்கிரமசிங்கவை அதற்கு நியமிப்பதன் மூலம் தலைமைத்துவப் பிரச்சினையை தீர்க்க முடியும் என ஐ.தே.க அங்கத்தவர்கள் கருதுகின்றனர்.

சஜித் பிரேமதாஸ புதிய தலைவராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் கரு ஜயசூரிய தொடர்ந்தும் பிரதித் தலைவராக இருக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ச-5)

# பொன்சேகா...

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இவ்வாறு ஒத்திவைக்கப்படுவதாக இராணுவ ஊடகப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபயமெதவெல தெரிவித்தார்.

இராணுவ சேவையில் ஒழுக்க விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டை விசாரணை செய்யும் பொருட்டு இந்த இரண்டாவது இராணுவ நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வெடிவிபத்...

இப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களின் ஒருவரான மேற்படி குடும்பஸ்தர் அங்கு கிடந்த ஒரு பொருளை கைகளில் தூக்கியிருக்கின்றார். அவர் அப் பொருளை எறிந்த போது அது வெடித்தது.

இதனால் அவரது கால்களில் காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# இலங்கையர்...

பயிற்சி வழங்கப்படவிருந்தது.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா தொழில் சந்தையை பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளை யூ.எஸ்.எயிட். நிறுவனம் மேற்கொள்ளக் கூடாதென காங்கிரஸ்சபை உறுப்பினர் பிஷோக் தெரிவித்துள்ளார். (ச-5)

# பாக். தீவிர..

பயிற்சிகளைப் பெற்றார் என்ற அவ் இயக்கத்தின் தீவிரவாதி ஒருவர் இந்தியாவின் மராட்டிய மாநில பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தை கோத்தபாய முற்றாக நிராகரித்துள்ளார்.

இலங்கையில் எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இயங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# ஜொனியன்ஸ் அணியினை இலகுவாக வென்று சம்பியனானது பலாலி விமானப் படையணி




யாழ் மாவட்ட இராணுவத்தினரும் யாழ் மாவட்டக் கிரிக்கெட் அணியும் இணைந்து யாழ் மாவட்ட மக்களிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்காக இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை கடந்த ஒரு மாதகாலமாக நடத்தி வந்தன.

மேற்படி சுற்றுப் போட்டியில் யாழ் மாவட்டக் கழகங்கள் மற்றும் இராணுவ அணிகள் உட்பட 22 அணிகள் பங்குபற்றின. சுற்றுப் போட்டியின் இறுதிப்பேட்டி நேற்று வெள்ளிக் கிழமை பிற்பகலில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இவ்விறுதிப்பேட்டிக்கு சிறப்பு விருந்தினராக இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரிய கலந்துகொண்டார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பலாலி விமானப் படையணி முதலில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதற்கிணாங்க களமிறங்கிய ஜொனியன்ஸ் அணிக்கு தொடக்கம் முதலே பேரிடி வீழ்ந்தது. அவ்வணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குமணன் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்தும் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட 50 ஓட்டங்களுக்கு முழுமையாக ஆட்டமிழந்திடும் நிலையிலிருந்தது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம். இருந்தும் இறுதியாக வந்த ஹரிவதனன் மற்றும் தொடக்கம் முதலே களத்தில் ஒரு பக்கமான நின்று கொண்டிருந்த லவேந்தரா ஆகியோரின் துடுப்பாட்டத்தினால் ஓட்டங்கள் சேர்ந்தது. எனினும் கணிசமான ஓட்டங்களை சேர்க்க முடியவில்லை இறுதியில்19.4 ஓவர்களில் 99 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம்.

துடுப்பாட்டத்தில் ஹரிவதனன் சிறப்பாக ஆடி 43 ஓட்டங்களையும் லவேந்திரா 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் விமானப்படை சார்பாக நுகபால, நதீர தலா 3 விக்கெட்டுக்களையும் இந்திக 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 100 என்ற வெற்றி இலக்கை நோக்கிபதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய விமானப்படை அணிக்கு முதல் விக்கெட் இணைப்பாட்டமே பலமாக அமைந்தது.

முதல் விக்கெட்டுக்கான நதீர, பிரேமரட்ண ஆகியோர் 68 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். நதீர 27 ஓட்டங்களையும் பிரேமரட்ண 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்த வீரர்கள் நிலைத்து நிற்க 11.3 ஓவர்களில் 2விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து வெற்றி இலக்கை அடைந்தது விமானப் படையணி. பந்து வீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக காண்டீபன் 2விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இறுதிப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் வி.ஹரிவதனனும் சிறந்த களத்தடுப் பாளராக அதே அணியின் பிரணவனும் இறுதிப் போட்டியின் நாயகனாக விமானப்டை அணியின் நதீரவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-5)

## மக்களை காக்க ...

களின் வீடியோ காட்சிகளின் அடிப்படையில் இராணுவம் யுத்த முன்நகர்வுகளை தீர்மானித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயமாக பயன்படுத்தினர். படையினர் புலிகளின் பாதுகாப்பை தகர்த் தெறிந்து பொதுமக்களை மீட்டெடுத்தனர்.

பொதுமக்கள் இழப்புக்களை தவிர்த்து யுத்தம் முன்னெடுக்கப்பட வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குழுக்கு கட்டளையிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து தப்பிச் செல்லும் பொதுமக்களை பாதுகாப்பதற்காக 40 இடங்களில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டனர்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்கொலைக் குண்டு தாக்குதல்களை மேற் கொண்டு பாரிய இழப்புக்களை ஏற்படுத்த முயற்சித்தனர்.

காயமடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் படையினர் அடைக்கலம் வழங்கினர்.

காயமடைந்த சில விடுதலைப் புலி உறுப்பினர்கள் விமான மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

இராணுவப் படையினர் வேண்டுமென்றே பொதுமக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக சில உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும் அதில் உண்மையில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட அரசாங்க வைத்தியசாலை ஒன்றை படையினர் வசப்படுத்திய போது இராணுவம் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக பிரசாரம் செய்யப் பட்டதாகவும் அந்தப் பிரசாரம் பொய்ப்பிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தமிழ் கட்சிகளின் அரங்...

னை தளமாகக் கொண்ட சில பிரதிநிதிகள் இந்த ஒன்றியத்தின் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதைத்தான் கடுமையாக எதிர்ப்பதாக தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜி லிங்கம் தெரிவித்தார்.

நான் அதை எதிர்க்கிறேன். கே.பி. தற்போது அரசாங்கத்தின் நலன்களுக்கு ஏற்ப செயற்படுகிறார்.

அவரின் பிரதிநிதிகளை எமது கூட்டங்களில் இணைத்துக் கொள்ள முடியாது.

பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனைக் இக் கூட்டங்களுக்கு அழைப்பதற்கும் யோசனை தெரிவிக்கப்பட்டது.

அதையும் நான் எதிர்க்கிறேன் அவர் தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத் தவராக உள்ளார் என சிவாஜிலிங்கம் கூறினார்.

தமிழ்க் கட்சிகளின் ஒன்றியத்தின் அடுத்த கூட்டம் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

Organ/Violin Notes

Organ, Guitar, புல்லாங்குழல், வீணை, வயலின், நாதஸ்வரம் போன்ற இசைக்கருவிகளில் இசைக்கக்கூடியவாறு 350 சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள், கிறிஸ்தவப்பாடல்கள் போன்றவற்றிற்கான இசைக் குறிப்புக்கள்(Notes) புத்தகங்களாக வெளியிடப்பட்டுவருகின்றன. Organ, Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளின் புதிய பிரிவுகள் இன்று ஆரம்பமாகின்றன. S.S.Rajeindran,
karaweena Isai Manram, 75, Temple Road, Jaffna. Mobile No:0777031293
(C-1140)

மெகா கொம்ப்யூட்டர் கல்வி புலமைப்பரிசில்

September
பரீட்சை
12
ஞாயிறு

Collect Your Free Admission Card

A/L பரீட்சைகளின் பின்

கடந்த 10ஆண்டுகளாக தகவல் தொழில்நுட்பக் கல்விக்காக இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்ற ஏசியனின் மெகா புலமைப்பரிசில் பரீட்சை இவ்வாண்டும் நடைபெறுகின்றது.

யார் பங்குபற்றலாம்

இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள், உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்திருப்போர், பல்கலைக் கழக மாணவர்கள், அரச தனியார் அலுவலர்கள் மற்றும் கொம்ப்யூட்டர் துறையில் ஆர்வமுடையோர் அனைவரும் இத்திட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

உள்நாட்டு வெளிநாட்டு அங்கீகாரம்

இப்புலமைப்பரிசிலில் வழங்கப்படும் கொம்ப்யூட்டர் பாடநெறிகள் அனைத்தும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சு ஆணைக்குழுவில் பதியப்பட்டதும் ISO 9001 : 2000 சர்வதேச தர அங்கீகாரமும் பெற்றவை.

இலவச அனுமதிகள்

இலவச அனுமதிகளை யாழ். நகர், நெல்லியடி, சாவகச்சேரி சிஎஸ்சி - ஏசியன் பயிற்சி நிலையங்களிலும் மற்றும் 12.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் பரீட்சை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடநெறிகள்

Tally Accounting | Office Automation | Computer Application | PC Professional
Digital Pre-Press (DTP) | Video Production | Cartoon Animation | Advanced JAVA Programming | Hardware & Networking | 2D & 3D Modeling | Graphic Design | Web Animation | Macromedia Application | Web Design & Development | Web Programming & Information Technology | Software Engineering
Honours Diploma in Computer Application | Master Diploma in Multimedia

பரீட்சை நிலையங்கள்

யாழ்.நகரில் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
நெல்லியடியில் : நெல்லியடி திரு இருதய கல்லூரி
சாவகச்சேரியில் : சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி

ISO 9001 : 2000 Certified Institution

விபரங்கள் மற்றும் இலவச பரீட்சை அனுமதிகள் கீழ்க்கண்ட நிலையங்களில்

CSC-ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267
(C-2439)

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
SKY LINE INFOMATION TECHNOLOGY CENTRE
இன் மற்றுமொரு புதிய கிளை வட்டுக்கோட்டை வீதி, சங்கரத்தையில்
(12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திறந்துவைக்கப்படுகின்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I – Sept. 11 சனிக்கிழமை 8.00 a.m
பிரிவு II – Sept. 12 ஞாயிற்றுக்கிழமை 9.00 a.m

There is a good opportunity at sky line ITC for G.C.E.A/L 2010 Batch Student

CERTIFICATE COURSES
✶M.s Office ✶Adope pagemaker ✶HTML
✶Adope photoshop ✶video Studio Editing
✶Corel Draw ✶Internet & E-mail Pascal Java

ஆண்டு-5 முதல் ஆண்டு-9 வரையான சிறுவர்களுக்கு விசேட பயிற்சி நெறிகள்

DIPLOMA COURSES
✶Visual Basic programming
✶HardWare Technology
✶Accounting Packages ✶Auto Card

பாடசாலை மாணவர்களுக்கான ICT,GIT

DIGITAL MEDIA TECHNOLOGY
✶ Computer Reparing & Services
✶ Computer Printing & Scanning

Kid's Computer Courses

ONLINE COURSES
1) FIT Colombo University.
2) IT-ICT Education Services Colombo

குறைந்த கட்டணத்தில் இரண்டு பயிற்சி நெறிகளை மேற்கொள்ளலாம்.

வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணத்துடன் இலவசமாக பயிற்சி நெறி வழங்கப்படும்

தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன

உங்கள் வெற்றியே எமது நோக்கம்

SKYLINE INFORMATION TECHNOLOGY CENTRE
Govt Reg No: VW/Fn/R/I/01/2008, Head Office DICA Reg No :0041/JAF/TC/10
Ponnalai Road, Sithankerny, Jaffna, Srilanka.
Branch Office: Vaddukoddai Road, Vaddukoddai.
T.P No: 0215100235, 0212250078, 0779527575, 0771362080
www.skylineitc.com, e-mail: Skyline.ltc@gmail.com, Skylineitc@computer4u.com
(C-1142)

மாபெரும் மலிவு விற்பனை யாழ்ப்பாணத்தில்...

AHIEZER SUPPLIERS



எகி(H)சர் சப்ளையர்ஸின் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் உள்ள புதிய காட்சி அறையில் (பல வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக) இன்னும் ஒரு படி மேலே சென்று பல பொருட்கள் உங்களுக்காக விசேட விலைக் கழிவுடன் .....!

☞ Tiles விற்பனையில் புதிய புரட்சி ... India, Australia Tiles Company ஆன H & R Johnson (Super cut) Tiles நேரடி இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. (www.hrjindia.Com) (சர்வதேச தரநியமம் ISO மற்றும் இலங்கை தர நியமம் SLS தரச்சான்று பெற்றது)

☞ உங்கள் குளியலறை புதிய பொலிவு பெற India, Malaysia விலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Commode, Squatting Pan, Bathroom Fittings.



☞ மிகக் குறைந்த விலையில் S - LON PE+ நீர்த்தாங்கிகள்

☞ 2 வருட உத்தரவாதத்துடன் Venus, Bajaj Ceiling Fans.

☞ *Electrical Wires (வயர்) & Electrical Accessories (உதிரிகள்), New Design show Lamps.*

☞ ISO, SLS தரம் வாய்ந்த PVC Pipes, Conduit Pipes & Fittings.

☞ Large Diameters PVC Pipes and Fitting available

★ தரமாகவும் மலிவாகவும் நீங்கள் ஏமாற்றமடையாமல் கொள்வனவு செய்ய வேண்டுமானால் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

25000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு வாகன சேவை இலவசம்...!

[Building Department, Contractors, NGO'S, Water Board, Plumbers & Electricians] ஆகியவற்றுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

AHIEZER SUPPLIERS
No .289, Brown Road, Kaladdi Junction, Jaffna.
021 5100 700
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அருகில்)
(C-1141)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.